பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 21 திங்கட்கிழமை (06.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 10

# அரசுக்கு ஐ.தே.கட்சி வழங்கிய காலக்கெடு முடிவடைந்துவிட்டது!

## ஜனவரி முதல் மக்கள் எழுச்சிப் போராட்டம் கட்சியின் மகாசம்மேளனத்தில் ரணில் அறிவிப்பு

கொழும்பு,டிசெம்பர் 6

**நாட்டு மக்களுக்கு உரியதைச் செய்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் அவரது அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த காலக்கெடு முடிவடைந்துவிட்டது. பொறுத்தது போதும் என்றாகிவிட்டது. இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் செயற்றிட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே ஜனவரி மாதம்முதல் நாடளாவிய ரீதியில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கும்.**

**- இவ்வாறு முழங்கினார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. நேற்றுக் கட்சியின் மகாசம்மேளனக் கூட்டத்தில் - பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையிலே உரையாற்றுகையிலேயே அவர் இப்படி ஆக்ரோஷமாக முழங்கினார்.**

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பதாவது மகாசம்மேளனக் கூட்டம் நடைபெற்றது. அதற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போது ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது -

இன்று நாட்டில் மிக முக்கியமான அரசியல் பிரச்சினை நிலவுகிறது. வாழ்க்கைச் செலவு வீதம் அதிகரித்து, மக்கள் மூன்று வேளை உணவுக்காக போராடுகின்றனர். ஆனால், தனது மூன்றாவது பதவிக்காலத்துக்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிரமப்படுகிறார். இந்த இரண்டில் முக்கியமானது மக்களின் மூன்றுவேளை உணவுக்கான போராட்டம். அதற்கு முழுமையான ஆதரவு வழங்கியும் ஜனாதிபதியின் திட்டங்களுக்கு எதிராகவும் நாடளாவிய ரீதியில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை எதிர்வரும் ஜனவரி முதல் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ளது.

மக்களுக்கு சேவையாற்றுவதற்கு இந்த அரசுக்கு ஐ.தே.கட்சி வழங்கிய காலக்கெடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிதி மோசடி குறித்து படை அதிகாரி மீது விசாரணை

கொழும்பு.டிசெ.6

இராணுவ உயர்மட்ட அதிகாரி ஒருவர் நிதி மோசடியில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

ஹோமாகம பனாகொடையில் உள்ள இராணுவ முகாமைச்சுற்றி வேலி அமைக்கவென குறித்த இராணுவ அதிகாரி 48 லட்சம் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இராணுவ முகாமைச்சூழ வேலி அமைக்கப்படவில்லை. அது குறித்த எந்த நடவடிக்கையிலும் அந்த அதிகாரி ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்தே விசாரணை நடத்துமாறு இராணுவத்தைப் பணித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு எனத் தெரிய வருகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்கள் கொடுப்பனவு 10 ஆயிரம் உயர்வு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் ரூபா 10 ஆயிரம் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்தத் தகவலை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரொய் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.

இந்த மேலதிக கொடுப்பனவு காரணமாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ள ரயில் மற்றும் பஸ் இலவச போக்குவரத்து சலுகை நீக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ரயில் மற்றும் பஸ்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச அனுமதிகளை பயன்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமது சொந்த வாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் கட்சியின் மகாசம்மேளனம் அங்கீகாரம்

கொழும்பு.டிசெ.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்தவேண்டுமென்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு ஐ.தே.கவின் 50 ஆவது மகாசம்மேளனத்தில் நேற்று ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது மகாசம்மேளனம் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு நகரசபைத் திடலில் நேற்று நடைபெற்றது. நாட்டின் முக்கியமான விடயங்களாகக் கருதப்படும் ஏழு அம்சத் தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், செயற்குழு அங்கத்தவர்கள் இதில் கலந்துகொண்டனர். கட்சித் தேசிய நிறைவேற்றுக் குழுவின் பொறுப்புக்களை, கடமைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான சகல அதிகாரங்களையும் கட்சியின் செயற்குழுவிற்கு வழங்கவேண்டுமென இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல்கால வாக்குறுதிகள் கடந்த ஆறு மாத கால ஆட்சியில் நிறைவேற்றப்படாமை, சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்காமை, பொருளாதாரத்தை மோசமான நிலைக்குத் தள்ளியமை, அரசியல் பழிவாங்கல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்காமை, அரச ஊடகங்களை ஒருதலைப்பட்சமாகப் பயன்படுத்துதல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் அனைத்தையும் கண்டித்தும் இங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டுமென ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்வதென்றும் இந்தக் கோரிக்கை சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்கான அதிகாரங்களை கட்சியின் செயற்குழுவிற்கு வழங்குவதென்றும் சம்மேளனத்தின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசமைப்பு விதிகளில் காணப்படும் சட்ட திட்டங்களுக்கு மாறாக அரசமைப்பை திருத்தம் செய்வதற்கு அல்லது ரத்துச் செய்வதற்கு அல்லது பிரதியீடு செய்வதற்கு எடுக்கும் எந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## 35 மாத யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் பெரும் பலமடைந்துள்ளனர்

கொழும்பு.டிசெ.6

முப்பத்தியைந்து மாத கால யுத்தநிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் நவீன இராணுவ வசதிகளைக்கொண்ட கட்டமைப்பாகத் தன்னை மாற்றிக்கொண்டுவிட்டது.

- இவ்வாறு புலிகளின் வலிமையான நிலையை உயர்த்தி வெளியிடுகின்றார் ஆங்கில வார இதழ் ஒன்றில் அதன் அரசியல் ஆய்வாளர் ஒருவர்.

நவீன - உயர்ந்த - இராணுவக் கட்டமைப்பு வசதிகளைப் புலிகள் இப்போது பெற்றுக் கொண்டுவிட்டனர்.

மிக வலிமையான இராணுவக் கட்டமைப்பில் புலிகள் இயக்கம் உள்ளதால் இனிமேல் யுத்தத்தின்போது பழைய - முன்னைய இராணுவத் தந்திரோபாயங்களையோ, யுக்திகளையோ கையாளவேண்டும் என்ற கட்டாயம் அந்த இயக்கத்துக்கு இல்லை.

சர்வதேச சமூகத்தில் அந்த இயக்கத்துக்கு கிட்டியுள்ள புதிய - மதிப்பார்ந்த - இமேஜ் உடன் படை நடவடிக்கைகளை அந்த இயக்கம் முன்னெடுக்கமுடியும் - என்றும் அந்த அரசியல் ஆய்வாளர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு மோசமடைகின்றது என்று தெரிவித்தே 2003 ஆம் ஆண்டு நவம்பர் முற்பகுதியில் அப்போது ஆட்சியில் இருந்த ரணில் அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பிடுங்கி எடுத்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஆனால், அதற்குப் பின்னரும் நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. புலிகள் தங்கள் பலத்தை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

- இப்படி அதே ஆங்கில வார இதழில் பிரபல பாதுகாப்பு ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

### கொள்ளையர்கள் கைவரிசை:

## தமிழ்க் குடும்பப் பெண் கனடாவில் குத்திக் கொலை!

யாழ்ப்பாணம்,டிசெ.6

இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் கனடாவில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இவரது வீட்டில் பொருள்களைக் கொள்ளையிட்ட கும்பல் ஒன்று இவரைக் குத்திக் கொலைசெய்தது என்று கூறப்படுகிறது.

கனடா கியுபெக் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

மீசாலை வடக்கைச் சொந்த இடமாகக் கொண்ட திருமதி டயானி மஞ்சுதன் என்பவரே கொலைசெய்யப்பட்டிருக்கின்றார்.

இவரது கணவர் வீட்டில் இல்லாத சமயத்தில் வீடு புகுந்த திருடர்கள் இக்கொலையைப் புரிந்திருக்கின்றனர். சம்பவம் நடந்தபோது வீட்டில் தங்கியிருந்த இவரது உறவினர்கள் இருவர் கொள்ளையர்களிடமிருந்து தப்பிவிட்டனர்.

இக்கொலை தொடர்பாக கியுபெக் மாகாணப் பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

(ஐ-203)

## இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக கொழும்பில் மாநாடு

கொழும்பு.டிசெ.6

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிராக மாநாடு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின்இடைக்கால நிர்வாக யோசனை நிறைவேற்றப்படுமானால் இலங்கை பிளவுபடுவதோடு இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படும் என்ற தொனிப்பொருளிலேயே இம்மாநாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாடு கொழும்பில் பிரபல ஹோட்டல் ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாநாட்டில் பிரிட்டன் ஊடகவியலாளரான சோல் ஹரிஸ் மற்றும் கனடா ஊடகத் துறையைச் சேர்ந்த ஸ்ருவல் மெல், நோர்வே நாட்டின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் ரொபிக் உட்பட இலங்கையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டை ஒழுங்கு செய்தவர்களின் விவரம் எதுவும் இன்னும் வெளியிடப்படவில்லை.

(க-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஈராக்கில் 18 மணிநேர மின்சாரம் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என அறிவிப்பு

பக்தாத்,டிசெ.6

அடுத்தாண்டு இறுதிக்குள் ஈராக்கில் தினமும் 18 மணிநேரம் மின்சாரம் வழங்குவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

போரால் சீரழிந்த ஈராக்கில் பல ஆயிரம் கோடி ரூபா செலவில் மறுசீரமைப்புப் பணிகள் நடக்கின்றன. இருப்பினும் தீவிரவாதிகளின் தொடர் தாக்குதலால் இப்பணிகளில் ஆங்காங்கு தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ஈராக் மக்கள் மின்சார வசதியின்றித் தவிக்கின்றனர். தினமும் பத்து முதல் 15 மணி நேரம் மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது. ஆனால், சதாம் ஆட்சியில் இருந்ததைவிட இப்போது முன்னேற்றமடைந்துள்ளது என அமெரிக்கா கூறியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கக் கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தும் முன், அந்நாட்டில் தினமும் 4ஆயிரத்து 400 மெகாவாற் மின்சாரம் உற்பத்திசெய்யப்பட்டது. தற்போது 5ஆயிரம் மெகாவாற் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. அடுத்தாண்டு இறுதிக்குள் இதை 5ஆயிரத்து 500 முதல் 6ஆயிரம் மெகாவாறறாக உயர்த்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதன் மூலம், ஈராக் மக்களுக்கு தினமும் 18 மணி நேரம் மின்சாரம் வழங்கமுடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மட்டுமே மறுசீரமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. குர்திஷ் மற்றும் ஷியா முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் அந்தப் பிரச்சினை இல்லை. மறுசீரமைப்புப் பணிகள் திட்டமிட்டபடி நடக்கின்றன. ஈராக்கில் பெரும்பான்மை மக்களாக உள்ள இவர்கள், அமெரிக்காவுக்கு ஆதரவாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனி முஸ்லிம்கள், சதாம் ஹுசைனின் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தியவர்கள். ஏனெனில், சதாம், சுனி முஸ்லிம்தான். அந்த விசுவாசத்தால்தான் இம்மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகளவில் நடக்கின்றன. தீவிரவாதிகளின் பாதுகாப்பு மிக்க பகுதிகளாக இவை உள்ளன. மக்களும் அவர்களைக் காட்டிக்கொடுப்பதில்லை என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் ஆதிக்கம் மற்றும் தாக்குதல்கள் காரணமாக இப்பகுதியில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இப்பகுதியில்தான் மின்சார வசதிகள் குறைவாக உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரமின்மையால் பொதுமக்கள் பலர் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-க)

## பாக். ஜனாதிபதி லண்டன் பயணம்

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் நேற்று லண்டனுக்கு விஜயம் செய்தார்.

லண்டன் செல்லும் இவர் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இப்பேச்சுக்களில் இந்திய - பாகிஸ்தானிடையிலான காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

அமெரிக்காவுக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டே நேற்று லண்டன் புறப்பட்டார் முஷாரப். (ஐ-க)

## காஷ்மீரில் தாக்குதல் 12 பேர் மரணம்!

காஷ்மீர்,டிசெ.6

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் தென் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்; 4 பேர் காயமடைந்தனர்.

ரிமோட் கட்டுப்பாட்டு இயந்திரத்தின் மூலமே தீவிரவாதிகள் இக்குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் சென்ற வாகனமே இலக்காகியுள்ளது. வாகனச் சாரதியும் இராணுவ உயர் அதிகாரியும் இதில் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட தீவிரவாதிகள் தப்பிச் சென்றுவிட்டனர் எனப் படையினர் தெரிவித்தனர். (ஐ-க)

# ஈராக்கில் தாக்குதல்கள் 37 பேர் உயிரிழப்பு!

பக்தாத்,டிசெ.6

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள பள்ளிவாசலொன்றின் அருகில் கார்க்குண்டுத்தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் 14பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

சுனி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அத்தாமாயா என்னும் பகுதியிலேயே இக்கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

அதிகாலை சுபஹ் தொழுகையை முடித்துவிட்டு வீடு திரும்பியவர்களே இத்தாக்குதலில் பலியாகியுள்ளனர். 14 பேரும் உடல்சிதறி - இரத்தவெள்ளத்தில் - அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தனர் என சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் நகரின் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இத்தாக்குதலை யார் மேற்கொண்டனர் எனத் தெரியவில்லை. விசாரணைகளை ஈராக் தேசிய பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை -

பக்தாத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ரொக்கட் குண்டுகள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினால் பொலீஸ் நிலையம் முன் நிறுத்தப்பட்டிருந்த இரு வாகனங்கள் தப்பிடித்து எரிந்தன. 11 பொலீஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இந்தத் திடீர் தாக்குதலையடுத்து அப்பகுதியில் பெரும் புகைமண்டலம் எழுந்ததாக பொதுமக்கள் பலர் தெரிவித்தனர்.

அத்தோடு, இப்பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 50 கைதிகளையும் தீவிரவாதிகள் மீட்டுச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலைத் தாமே நடத்தினர் என ஜோர்தான் பிரஜையான - ஈராக்கில் செயற்படும் - பிரதான தீவிரவாத இயக்கத் தலைவரான அபு முஸாப் அல்-ஸர்காவியின் அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஈராக்கில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவது தேர்தல் பணிகளை மந்தமடையச் செய்திருக்கின்றது.

அத்தோடு, கிர்குக் எனும் இடத்தில் அமெரிக்க இராணுவத்தினர் சென்ற வாகனத் தொடரணி மீது கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் ஓர் அமெரிக்கச் சிப்பாய் உயிரிழந்தார்.

அத்தோடு, ஜோர்தான் எல்லையருகில் உள்ள சோதனைச் சாவடி அருகிலும் கார்க குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் 11பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

# உலக அழகிப் பட்டம் வென்றார் பெருநாட்டின் மரியா ஜூலியா

2004ஆம் ஆண்டின் உலக அழகிப் பட்டத்தை பெருநாட்டு அழகி மரியா ஜூலியா மான்டில்லா கார்சியா(வயது20) வென்றெடுத்துள்ளார்.

சீனாவின் சான்யா நகரில் உலக அழகிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 107 நாடுகளின் அழகிகள் பங்கேற்றனர். தங்கள் அழகாலும், அறிவாலும் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினர் அழகிகள்.

இதில் பெரு நாட்டின் மரியா ஜூலியா பட்டம் வென்றார். டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த கிளாட்டியா ஜூலிஸ்ஸா மன்டில்லா காசியா(வயது 18) இரண்டாமிடத்தைப் பிடித்தார். அமெரிக்காவின் நான்சி ராண்டல்(வயது 24) மூன்றாமிடத்தைத் தட்டிக்கொண்டார்.

முதன்முறையாக அழகித் தேர்வு வித்தியாசமான முறையில் நடைபெற்றது. போட்டியைத் தொலைக்காட்சி மூலமாகப் பார்த்த லட்சக்கணக்கான பார்வையாளர்கள் தொலைபேசி, எஸ்.எம்.எஸ். இணையத்தளம் மூலமாக வாக்களித்து அழகிகளைத் தெரிவுசெய்தனர். முன்னர் நடுவர் குழுவே சிறந்த அழகிகளைத் தெரிவுசெய்துவந்தது. கடந்த ஆண்டில் அயர்லாந்தில் ரோசன்னா டேவிசன் உலக அழகியாகத் தேர்வுசெய்யப்பட்டார்.

அடுத்த ஆண்டு உலக அழகிப் போட்டி சீனாவிலேயே நடைபெறும் என போட்டியின் அமைப்பாளர் ஜூலியா மார்லி தொவித்தார். நைஜீரியாவில் உலக அழகிப் போட்டி 2002 இல் நடத்தப்பட்டபோது சர்ச்சை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படும் ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி லோரன்ட் அறிவிப்பு

அபுஜான்,டிசெ.6

ஐவரிகோஸ்ட்டில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர் கட்சித்தலைவர் அலாசேனும் போட்டியிட வகை செய்யும் விதத்தில் அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி லோரன்ட் அறிவித்துள்ளார்.

நாட்டின் வடபகுதியை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களின் முக்கிய கோரிக்கையும் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் மிகப்பெரிய கொக்கோ உற்பத்தி நாடான ஐவரிகோஸ்ட்டில் சென்றமாதம் வன்முறை வெடித்தது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைகளைக் காணவென தலைநகர் அபுஜானுக்கு சென்றிருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதியும் இந்த ஆலோசனையை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி லோரன்ட் 'உததேசப் பிரேரணை அடுத்த வாரம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அதேசமயத்தில் இந்த சட்டதிருத்த விடயம் தொடர்பாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார்.

ஆனால், கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு தேவையற்றது என கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவென தென்னாபிரிக்க ஜனாதிபதி நேற்று ஐவரிகோஸ்ட்டின் வடபகுதிக்குச் செல்வாரென எதிர்பார்க்கப்பட்டது. (ஐ-க)



கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த போலிச் சாமியார்.

# இந்தியா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமைபெற ரஷ்யா உதவும்

## அந்நாட்டு ஜனாதிபதி புடின் உறுதி

மொஸ்கோ,டிசெ.6

இந்தியா ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு தமது நாடு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்று ரஷ்யா மீண்டும் உறுதியளித்திருக்கிறது.

இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேற்கண்டவாறு இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை கிடைத்தாலும், அதற்கு வீட்டோ அதிகாரம் கிடைக்காது என்று வெளியான செய்தி குறித்து கருத்து வெளியிட்ட விளாடிமிர் புடின், 'பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்ற நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் நிச்சயமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் ஏனைய நாடுகளுக்கு இருக்கும் வீட்டோ அதிகாரத்தை ரத்துச் செய்யுமாறு கோருவதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும்' - என்றார். (ஐ-க)

# உக்ரைனின் மறு ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் போட்டியிடுவாரென அறிவிப்பு

உக்ரைனில் மீண்டும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவது உறுதி என்று பிரதமர் விக்டர் யனுகோவிச் தெரிவித்தார்.

அண்மையில் உக்ரைனில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம்கட்ட வாக்கெடுப்பு முடிவுகள் செல்லுபடியற்றது என அந்நாட்டு உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இதனையடுத்தே உக்ரைனில் மறுதேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பிரதமர் விக்டர் யனுகோவிச் விமர்சித்தார்.

உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் - இந்தத் தீர்ப்பால் இப்போது மீண்டும் தேர்தலில் நிற்பதை - போட்டியிடுவதை - தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும் - பிரதமர் யனுகோவிச் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் மீண்டும் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தத் தேர்தலுக்கு முன்னதாகத் தேர்தல் சட்டங்கள் சில மாற்றியமைக்கப்படவேண்டும் என எதிர்த்தரப்பினர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து அதை விவாதிப்பதற்காகவென விசேடமாகக் கூடிய நாடாளுமன்ற விவாதத்தில் இணக்கப்பாடுகள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

# உலகில் உள்ள 134 நாடுகளில் தூக்குத் தண்டனை ரத்து

நியூயோர்க்,டிசெ.6

உலகில் உள்ள 134 நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்துச்செய்துள்ளன. 62 நாடுகளில் தூக்குத்தண்டனை இன்னும் அமுலில் உள்ளது.

2003ஆம் ஆண்டு மட்டும் சீனாவில் 5ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நாவின் ஆண்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலகில் மொத்தம் 134 நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்துச்செய்துள்ளன. 84 நாடுகள் அதனை முழுமையாக ரத்துச் செய்துள்ளன. 14 நாடுகள் சாதாரண குற்றங்களுக்குத் தண்டனை விதிப்பதில்லை என அறிவித்துள்ளன. ரஷ்யாவில் தூக்குத்தண்டனை முறையை ரத்துச்செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தூக்குத்தண்டனை அமுலில் உள்ள 32 நாடுகளில் கடந்த 10 ஆண்டுகளாக யாரும் தூக்கிலிடப்படவில்லை. 2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு 10 நாடுகள் தூக்குத் தண்டனை முறையைக் கைவிட்டுள்ளன. கசகஸ்தான், தஜிகிஸ்தான் நாடுகளில் தூக்குத் தண்டனைக்கு ஏற்கனவே பல கட்டுப்பாடுகள் உள்ளன.

பூட்டான், சமோவா, பொஸ்னியா, அர்மீனியா ஆகிய நாடுகளிலும் கடந்த ஆண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

உலகம் முழுவதும் 62 நாடுகளில் தூக்குத் தண்டனை அமுலில் உள்ளது. 2003 இல் இந்நாடுகளில் மொத்தம் 5 ஆயிரத்து 523பேர் பல்வேறு குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். இதில் சீனாவில் மட்டும் 5ஆயிரம் பேர், ஈரானில் 154பேர் மற்றும் ஈராக்கில் 113 பேரும் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

உதயன்

## பிரபாகரனின் கூற்றை நிரூபிக்கும் ஜே.வி.பியினர்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் விடயத்தில் தென்னிலங்கையில் உள்ள அரசியல் யதார்த்த நிலையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டியிருந்தார். தென்னிலங்கை அரசியல் தொடர்பான அவரது கருத்துக்கள் மீண்டும் ஒரு தடவை செயலில் நிரூபணமாகியிருக்கின்றன.

"தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசு அமைக்கப்பெற்றுள்ளது.

"தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இல்லை. தமிழர் விரோத இனவாதத்திலும் போர்வெறி பிடித்த இராணுவ வாதத்திலும் சிங்களப் பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித்திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்தநிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகிறது."
- இப்படிச் சுட்டிக்காட்டியிருந்தார் தலைவர் பிரபாகரன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் ஆதிக்க வலுவுடைய கட்சி ஜே.வி.பியாகும். அது, சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கின்றது. மூன்றாம் தரப்பு நடுநிலையாளராக நோர்வே செயற்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருந்தார் தலைவர் பிரபாகரன்.

இக்கூற்றுக்களை மெய்ப்பித்திருக்கின்றது ஜே.வி.பி. ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தமது அமைப்பின் சார்பில் நோர்வேத் தூதுவருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றார்.

"வஞ்சக எண்ணத்துடன் இரட்டை வேடம் போட்டு, இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் செயலில் நோர்வே ஈடுபட்டுள்ளது.

"புலிகளின் முன்னணி அமைப்பான தமிழ்ச் சங்கம் ஒஸ்லோவில் புலிகளுக்காக நடத்திய பிரசாரக் கூட்டத்தில் நோர்வேப் பிரதமர் கே.பொண்ட்விக், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சொல்பேர்க், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த லிஸா கோல்டன் அம்மையார், எரிக் சொல்ஹெய்ம் போன்றோர் பங்குபற்றியுள்ளனர். இந்தக் கூட்டத்திற்கான நிதி நோர்வே மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளினால் வழங்கப்பட்டது என்பது நன்கு தெரிந்ததே. புலிப் பிரிவினைவாதிகளுக்குச் சாதகமான நிலைப்பாட்டை நோர்வே கொண்டிருப்பதாலேயே அந்நாட்டைப் புலிகள் 'அனுசரணையாளர்கள்' ஆக ஏற்றுக்கொண்டனர்.

"முன்னைய அரசு அப்போது தனக்கு வேறு வழியில்லாததால் நோர்வேயை அனுசரணைப் பணிக்கு ஏற்றுக் கொண்டது. ஆனால், நோர்வேயோ அனுசரணைப் பணியிலிருந்து தடம்புரண்டு 'மத்தியஸ்தர்' நிலைக்குத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது.

"அமெரிக்காவினதும் ஐரோப்பிய யூனியன் நாடுகளினதும் பின்புல ஆதரவோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் ரணில் அரசு மீது திணிக்கப்பட்டது.

- இப்படி அந்தக் கடிதத்தில் காட்டமாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பி. தங்களின் அரசு நோர்வே மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றும், சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பாக இலங்கை மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள் என்றும் தெரிவித்திருக்கின்றது.

இந்தக் கடிதம் நோர்வேக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. ஜே.வி.பி. செயலாளரின் கடிதத்தில் விளங்கப்படுத்தப்பட்டுள்ள நிலைப்பாடுதான் இலங்கை அரசுடையதுமா என்பதை அறிவதற்கு எழுத்துமூலம் இலங்கை அரசைக் கோரியிருக்கின்றது நோர்வே.

"இல்லையில்லை. அது இலங்கை அரசின் நிலைப்பாடே அல்ல. இக்கடிதத்தை எழுதியவர் ஓர் எம்.பி.கூட இல்லை. அரசுக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள பங்காளிக் கட்சியின் வெறும் செயலாளர் மட்டும்தான் அவர் என்று ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவைத் தன்னிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் வகையில் நோர்வேக்கு விளக்கமளித்துத் தப்பிக்கொண்டுள்ளது இலங்கை அரசு.

அதுமாத்திரம் அல்ல. ஜே.வி.பி.நிலைப்பாட்டுக்கு மாறாக, நோர்வேப் பங்களிப்பை நாடாளுமன்றத்திலும் அரசு புகழ்ந்துரைத்து தலையில் வைத்துக்கூத்தாடியது.

ஜே.வி.பி. என்ன கூறினாலும் அமைதி முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரும் என்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான அனுசரணைப் பணி மிக முக்கியமானது. அந்த அடிப்படை விடயத்திலேயே ஆளும் தரப்புக்குள் இணக்கமில்லை.

அப்படியிருக்க, தமக்குள் இணங்கிப் போகாத அரசுக் கூட்டணிக் கட்சிகள் தமிழருக்கு ஒரு நியாயமான தீர்வை இணங்கித் தருவார்கள் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்?

இது விடயத்தில் தலைவர் பிரபாவின் கூற்றை மீண்டும் ருசுப்படுத்தியிருக்கின்றார்கள் சிங்கள, பௌத்த மேலாண்மைவாதப் போக்குடைய ஜே.வி.பியினரும் அவர்களை அரவணைத்து ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதியும்.




ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைதின நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் பண்ணிசை பாடுவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## பழைமைவாய்ந்த கேணியை மூட சங்கானை மேற்கில் பலத்த எதிர்ப்பு

வலி.தென்மேற்கு. டிசெ.6

வடலியடைப்பு - சங்கானை வைத்தியசாலை வீதியிலுள்ள பழைமை வாய்ந்த கேணி ஒன்றை அப்பகுதியிலுள்ள சிலர் மூடுவதற்கு முயற்சிமேற்கொண்டுவருவதாகவும் -

இதனையடுத்து அம்முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் - சங்கானை மேற்கு சனசமூக நிலையம், வலி. தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொது நலன் கருதி தமது முன்னோரினால் நிறுவப்பட்ட இந்தக் கேணியைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கு ஆவன செய்யப்படவேண்டும் என்றும் -

இதனை மூடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் - மேற்படி சனசமூக நிலையம் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பகுதி மக்களும் இந்தக் கேணியை மூட முயற்சிப்பது குறித்துத் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (எ-135)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.6

இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கமும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையும் இணைந்து நடத்தும் 'சாரத்தியம் - சவால்களும் சாமர்த்தியமும்' என்ற நூலின் அறிமுகவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் கௌரவவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் கலந்துகொள்வர்.

நூலின் அறிமுக உரையை யாழ். வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவர் த.சற்குணராசா நிகழ்த்துவார். வெளியீட்டு உரையை யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் நூலின் ஆய்வுரையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் பத்மநாதனும் நிகழ்த்துவர். (எ-190)

## மதகினைப் புனரமைக்க பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.6

வடலியடைப்பு நல்லுணி வீதியிலுள்ள சேதமடைந்த மதகினைப் புனரமைப்பதற்கும், இவ்வீதியைப் புனரமைப்பதற்கும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த புதன் கிழமையன்று பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்ட இப் பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் இவ்வீதியின் அவல நிலைமை பற்றி எடுத்துக் கூறினார்கள்.

இதற்குப் பதிலளித்த பிரதேச சபை செயலாளர் பி.விக்ரர் இவ் வீதியையும், மதகையும் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (எ-135)

## விளாவெளி இந்துமயானம் அருகே கழிவுகள் கொட்டுவதனால் சீர்கேடு!

வலிதென்மேற்கு,டிசெ.6

விளாவெளி இந்துமயானத்தின் சுற்றாடலில் கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, மயானத்திற்கு இறுதிக் கிரியைகளை நடத்தவரும் மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் -

சுற்றாடல் சுகாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இந்த மயானத்திற்குச் செல்லும் வீதியான தம்பித்துரை வீதி புனரமைப்புச் செய்யப்படாமல் சேறும்சகதியுமாக உள்ளது.

வலிமேற்கு, வலி தென்மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த 13 கிராமங்களில் வசிக்கும் இந்துசமய மக்கள் பயன்படுத்தும் இந்த மயானத்திற்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-135)

## சந்தைக் கழிவுகள் வெள்ளத்துடன் வீடுகளுக்குள்: திருநெல்வேலியில் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.6

திருநெல்வேலி மீன் சந்தைக்குப் பின்புறமாகச் செல்லும் வாய்க்கால் சீரான முறையில் அமைக்கப்படாமையினால்



சந்தைக் கழிவுகள் அப்பகுதி வீடுகளுக்குள் நுழைவதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மேற்படி வாய்க்கால் உடைந்து சிதைவடைந்துள்ளதால்,வாய்க்காலூடாகச் செல்லும் கழிவுநீர் மற்றும் மழை வெள்ளம் அந்தப் பகுதிக் குடியிருப்புகளுக்குள் புகுந்து விடுவதாகவும் -

இந்த வாய்க்காலுக்கு அருகில் மீன் சந்தையுள்ளதால் மீன் கழிவுகளும் இவ்வாறு வீட்டுவளவுகளினுள் நுழைந்து விடுவதாகவும் - விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு உருவாகி உள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை -

இந்த வாய்க்காலுக்கு அண்மையில் உள்ள திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் -

மாணவர்கள் சிலருக்குக் கால்களில் ஒரு விதமான தோல்வியாதி உருவாகியுள்



ளது என்றும் - சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (எ-6)

### உதயவாக்கு

தன்னம்பிக்கையுள்ளவன் எத்தகைய சவால்களையும் வென்று சரித்திரம் படைப்பான்.

### நாளை

கார்த்திகை 22
செவ்வாய்க்கிழமை
(07.12.2004)
திதி: தசமி
பிற்பகல் 03.00
நட்சத்திரம்: அத்தம்
மாலை 06.17
சுபநேரம்: 10.47 - 12.17
ராகுகாலம்: 03.17 - 04.47
(பழையநேரப்படி)

## அல்லாரை திட்டக் கிராமமாகத் தெரிவு

தென்மராட்சி,டிசெ.6

சேவாலங்க நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் அல்லாரைக் கிராமத்தினை பெண்களை சக்திப்படுத்தல் திட்டக் கிராமமாகத் தெரிவு செய்துள்ளனர்.

இத்திட்டம் மூன்று வருடங்களுக்கு இக்கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், ஐந்து லட்சம் ரூபா நிதி சுயதொழில் முயற்சிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடனுதவி கடந்த முதலாம் திகதி அல்லாரை அ.த.க.பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது.

அச்சுக்கூடத்தொழில், தையல், மருந்தகம், கோழி வளர்ப்பு, விவசாயம் ஆகிய சுயதொழில்களில் ஈடுபட்ட ஐந்து பெண்களுக்கே இவ்வாறு கடன்கள் வழங்கப்பட்டன.

மேலும், 14 பெண்களுக்கு வழங்கவென 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை அல்லாரை மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அல்லாரைப் பிரிவு கிராம அலுவலர் தி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சேவாலங்க நிறுவனப் பணிப்பாளர் எஸ்.ஆனந்தராசா, பெண்கள் சக்திப்படுத்தல் திட்டப் பணிப்பாளர் சுபாஷினி, நிறுவனத் திட்டப் பணிப்பாளர் கேசவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-117)

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




திரு. திருமதி பாஸ்கரலிங்கம் – கோகிலா

தம்பதிகளின்

**செல்வப் புதல்வி அர்ச்சலா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (06-12-2004) திங்கட்கிழமை லண்டனில் உள்ள தமது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் கொண்டாடுகின்றார். செல்வி அர்ச்சலாவை அப்பா, அம்மா, மாமா (லண்டன்), அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார், சித்திமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்கவென சிட்டிபுரம் கண்ணகை அம்மனின் அருள்வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

கோகிலா தொலைத்தொடர்பகம்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

தகவல்:
திரு. M. சின்னராசா.


# கோண்டாவில் சபரிச ஐயப்பன் ஆலயத்தில் மண்டலப் பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.6

கோண்டாவில் கிழக்கு சபரிச ஐயப்பன் ஆலயத்தில் வருடாந்த மகரஜோதி மகோற்சவ மண்டலப் பூசைப் பெருவிழா கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியது. இது தொடர்ந்து 60 தினங்கள் நடைபெற்று, தைப்பொங்கல் தினத்தன்று இடம்பெறும் மகரஜோதிப் பூசையுடன் நிறைவுபெறும்.

பெருவிழாக்காலங்களில் சிறப்பு நிகழ்வாக இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றமும், 9ஆம் திகதி வியாழக்கிழமை விசேட திரவிய ஹோமம் மற்றும் திரவிய அபிஷேகம் என்பனவும் -

12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 13ஆம் திகதி திங்கட்கிழமை மஞ்சமாதா பூசையும், 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு ரதோற்சவமும், 15ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தோற்சவம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும்.

மகோற்சவத்தைத் தொடர்ந்து 22ஆம் திகதி புதன்கிழமை பேட்டைத்துள்ளலும், 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இருமுடிகட்டி படி ஏறி நெய் அபிஷேகமும் ஜனவரி முதலாம் திகதி விஷேட அபிஷேகம் மற்றும் படிப்பூசையும், இரண்டாம் திகதி ஐயப்பன் ஜெயந்தி தினமும் -

ஜனவரி 14ஆம் திகதி தைப்பொங்கலன்று மகரஜோதி இடம்பெற்று விசேட நெய் அபிஷேக பூசை என்பவற்றுடன் திரு ஆபரணப் பெட்டி கொண்டுவருதல் இடம்பெறும். (எ)


**வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்**

**மணல் விநியோக அறிவித்தல்**

மழை காரணமாக மணல் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் ஆரம்பிப்பது பற்றி பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்.

(சி-39710) - நிர்வாகம்.



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3003205 இலிருந்து 3020284 வரை

சீட்டிழுப்பு இல. 1562 திகதி 4.12.2004

வெற்றி எண்கள்

08 22 39 44 52

போனஸ் எண் 56

ஜக்பொட் பரிசு ரூபா.25,18,700/- வெல்லப்பட்டுள்ளது.

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 25,18,700/- | 25,18,700/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,265 | 500/- | 26,32,500/- |
| 2 | 89,389 | 20/- | 17,87,780/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 0பும் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,09,079 | 10/- | 10,90,790/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.96,69,770/-

**Rs. 15,00,000/-**

தொடர் இல. 2088237 க்கு மேற்பட்ட ஸதா நிற டிக்கட்டுக்கள் 2004 டிசெம்பர் 08 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3005112-6-14
3003423-1-93
3006118-0-82
3016943-1-28
3006915-1-23

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



**புதிய கல்வியாண்டு - 2005**

தரம் 01 முதல் O/L வரை.

*ஆரம்பம் :* இன்று முதல் 12.12.2004 வரை அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒழுக்கம், கட்டுப்பாடு, சிறந்த கல்வி இவை எமது நிறுவனத்தில் மட்டுமே!

**மது கல்வி நிறுவனம்**

டச்சு வீதி, இருபாலை,

(39189) கோப்பாய்.


## அறநெறிப் பாடசாலைகளுக்கு மாதிரி வினாப்பத்திரங்கள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாதிரி வினாப்பத்திரத் தொகுதி மற்றும் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய பிரசுரம் ஒன்றை கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்து அறநெறிப் பாடசாலைகள் யாவும் இந்து அறநெறிப் பாடசாலை பிரிவுப் பரீட்சை, இந்து அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சை, இந்து தர்மாசிரியர் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தல்வேண்டும்.

மாணவர்கள் இப்பரீட்சைகளில் தோற்றி சித்திபெறுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பல்கலைக் கழக அனு மதிக்கு சில விசேட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். மாதிரி வினாத் தாள்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். சித்திபெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும். இவ்வாறு இந்தப் பிரசுரத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவிததுள்ளார்.

(எ-135)

### சுற்றுலாவுக்குப் பதியக் கோரிக்கை

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனால் சுற்றுலாச் செல்லவிரும்பும் மாணவர்கள் தமது பதிவுகளை நாளை முதல் 10ஆம் திகதி வரை மாணவர் பொது அறையில் மேற்கொண்டு உறுதிப்படுத்துமாறு இரண்டாம் வருட மாணவ பிரதிநிதி ஏ.என்.அன் ரனிராஜன் கேட்டுள்ளார். (6-203)


உடன் இணையுங்கள்
எதிர்காலத்தின் சவால்களை வெற்றியுடன் முகம்கொள்ளும் பட்டயக் கணக்காளர் ஆகிட....




இச்சலுகை 31.12.2004 வரை மட்டுமே

**aat - July 2005**
Foundation 2500/= Intermediate 3500/=

**Chartered - July 2005**
Foundation 3500/= Intermediate 4500/=

- அனுமதிக் கட்டணம் 1000/= மட்டுமே
- தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- விரிவுரைகள் அனைத்தும் 08.01.2005 இல் ஆரம்பமாகின்றன.

அலுவலக நேரம்
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினமும்
காலை 9.00 - மதியம் 1.00 வரை.

IPAS
199, பிரதான வீதி.
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி).
யாழ்ப்பாணம்.
☎: 0777-563294


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகமணி இரத்தினசாமி

புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி கனகமணி இரத்தினசாமி (இளைப்பாறிய அதிபர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, முன்னாள் உப - அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) அவர்கள நேற்று (05-12-2004) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.S.K.இரத்தினசாமி அவர்களின் அன்பு மனைவியும் கல்யாணி (Good Shepherd Convent, Kotahena), வதனி (Canada), மகேந்திரா (Germany), மாதங்கி (Holland) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாலன் (Dipped Products Limited), பிரேமகுமார், கௌரி, சௌந்தரநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கனகவேற்பிள்ளை, கனகராஜா, கனகரத்தினதேவி, கனகேஸ்வரி, சட்டத்தரணி கனகலிங்கசிவம் ஆகியோரின் பிரியமான சகோதரியும் சந்திரமலர், ராணி, ஆனந்தராசா, இராசசிங்கம் (சட்டத்தரணி), ரதி ஆகியோரின் மைத்துனியும் அபர்ணா, லோஷனன், டினேஷ், அஜித்தா, ஜீவகன், சஞ்சுதன், கபீந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அனனாரின் பூதவுடல் இன்று (06.12.2004) திங்கட்கிழமை பொரளை ஜயரத்தின மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெயது ஏற்றுக்கொள்ளவும்.

77/3 - 1/3, Vystwyke Road,
விஸ்ற்வைக் வீதி,
கொழும்பு - 15
Tel.: 2527603, 0777 - 494135.

தகவல்:
**கல்யாணி சிவபாலன்**
(மகள்).
(சி-39501)(26-18-45-24)

## திருமதி டயானி மஞ்சுதன்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (க.பொ.த. உயர்தரம், 2002 உயிரியல் பிரிவு) பழைய மாணவியுமாகிய திருமதி டயானி மஞ்சுதன் அவர்கள் 03.12.2004 அன்று கனடாவில் அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் த.மஞ்சுதனின் அன்பு மனைவியும் க.கந்தசாமி (ஓய்வு பெற்ற Depot Inspector, கோண்டாவில்), திருமதி கேமலதா கந்தசாமி (உதவிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம், தென்மராட்சி) தம்பதிகளின் ஆருயிர் சிரேஷ்ட புதல்வியும் க.டிலானி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, A/L 2004 - கணிதப் பிரிவு), க.குலானி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தரம் 10) ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும் காலஞ்சென்ற க.நடராசா (இராசையா), க.சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற கிளை மேற்பார்வையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்), திருமதி அன்னப்பிள்ளை சோமசுந்தரம், க.வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற Depot Inspector, வவுனியா), திருமதி வே.நாகேஸ்வரி (பேபி), க.கனகசபை (உத்தரவு பெற்ற நில அளவையாளர்), திருமதி க.விமலாதேவி, காலஞ்சென்ற க.நாகராசா, க.கிருஸ்ணராஜா, காலஞ்சென்ற திருமதி கி.லலிதா (ஆசிரியர், மந்துவில் றோ.க.அ.த.க.பா.), த.நவரட்ணவேல் (எழுதுநர், இ.மி.ச. யாழ்ப்பாணம்), திருமதி ரஞ்சிதா நவரட்ணவேல் (தாதி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் சோ.மோகனதாஸ் (ஆசிரியர், மட்டுவில் ம.வி.), திருமதி குகதாசன் ரூபறஜனி (லண்டன்), சோ.றங்கதாஸ் (சுவிஸ்), திருமதி சிவகுமார் ரூபவதனி (ஆசிரியர், மல்லாவி ம.ம.வி.) சோ.ஜெயதாஸ் (இத்தாலி), சோ.யசோததாஸ் (உரிமையாளர், [illegible]க்சகோ குளிரகம், சாவகச்சேரி), திருமதி சிவா கலைச்செல்வி, வே.கலைச்செல்வன் (கனடா), வே.கலைவாணன் (கனடா), வே.கலைறங்கன (இத்தாலி), திருமதி S.கலைவாணி (கனடா), திருமதி S.கலைரூபி (கனடா), க.முருகவேள் (பொறியியலாளர், நியாப், யாழ்ப்பாணம்), க.சிறிஸ்கந்தவேள் (கணனிப் பொறியியலாளர், Millenium IT), காலஞ்சென்ற க.திருமகள் மற்றும் க.இளங்கோவேள் (யா/இந்துக் கல்லூரி, A/L 2005 உயிரியில்), க.எழில்வேள் (யா/இந்துக் கல்லூரி, தரம் 9), திருமதி நடனரூபன் சுமி, ந.சிந்துஜன் (யா/இந்துக் கல்லூரி, A/L 2005 கணிதம்), ந.சஞ்சயன் (யா/இந்துக் கல்லூரி, A/L 2006 உயிரியல்). ந.மீரா (யா/இந்துக் கல்லூரி தரம் 9) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(39312)(24-18-45)

தகவல்:
க.கந்தசாமி.

# வன்னியில் தொடரும் மழையினால் வட்டக்கச்சிக்கான போக்குவரத்து பாதிப்பு

## பன்னங்கண்டி கிராமமக்கள் மீண்டும் இடம்பெயரும் ஆபத்து

வட்டக்கச்சி,டிசெ.6

நேற்றுமுன்தினம் இரவு தொடங்கி தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் வட்டக்கச்சி பிரதேசத்துக்கான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் இடம்பெயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்யும் கடும் மழை காரணமாக வட்டக்கச்சி பிரதான வீதியூடாக இராமநாதபுரம் செல்லும் வீதிகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. இதனால், பஸ் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

வீதியெங்கும் வெள்ளம் மேவிப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இதனால், வட்டக்கச்சி - பன்னங்கண்டிப் பகுதி மக்கள் மீண்டும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டபோது, வெள்ளநீர் வீடுகளுக்குள் உட்புகுந்து இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்கியிருந்தனர்.

இவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்குச் சென்று அழிவடைந்த குடிசைகளைப் புனரமைத்து குடிபுகுந்த இவ்வேளையில், மீண்டும் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டமை இப்பகுதி மக்களிடம் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. (எ-204-405)

## அறிவுக்கதிர் சஞ்சிகை புதனன்று வெளியீடு

கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களின் கல்வித் துறைசார் உத்தியோகத்தர்களால் வெளியிடப்படும் 'அறிவுக்கதிர்' சஞ்சிகையின் மூன்றாவது மலர் வெளியீடு நாளைமறுதினம் புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு கிளிநொச்சி ம.வியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் கலந்துகொள்வார். (எ-204-405)

## செயலமர்வுகள்

வட்டக்கச்சி,டிசெ.6

கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி.ஆசிரிய மத்திய நிலையத்தின் தொடருறுக் கல்விச் செயலமர்வு ஒன்று நாளை பரந்தன் இந்து ம.வியில் நடைபெறவுள்ளது.

உள்ளக விளையாட்டுத்திறன் விருத்தி என்னும் தலைப்பிலான இச்செயலமர்வில் சதுரங்கம், கரம் முதலான விளையாட்டுக்கள் தொடர்பான கருத்துரைகளும் செய் முறைகளும் இடம்பெறவுள்ளன. இச்செயலமர்வுடன் தொடர்புடைய ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு ஆசிரிய மத்திய நிலைய இணைப்பாளர் என்.செந்தில்வடிவேல் தெரிவித்துள்ளார். (எ-203-405)

★ ★ ★

வட்டக்கச்சி,டிசெ.6

கிளிநொச்சி அக்கராயன் ம.வி. ஆசிரிய மத்திய நிலைய செயலமர்வொன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நாளை இடம்பெறவுள்ளது.

'ஜி.சீ.ஈ. உயர்தர கல்விச் சீர்திருத்தம் தொடர்பான போக்குகள்' என்னும் தலைப்பில் இச் செயலமர்வு நடைபெறவுள்ளது என்றும் -

இதில், கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட உயர்தர வகுப்புகளை உள்ளடக்கிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்துகொள்ளலாம் என்றும் - அக்கராயன் ம.வித்தியாலய ஆசிரிய மத்திய நிலைய இணைப்பாளர் எஸ்.இதயசிவதாஸ் தெரிவித்துள்ளார். (எ-203-405)

★ ★ ★

வட்டக்கச்சி,டிசெ.6

தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழிப் பிரிவினரால் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பிப்பது தொடர்பான வதிவிடச் செயலமர்வு ஒன்று நாளை தொடக்கம் 9 ஆம் திகதி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த 120 ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-203-405)

# முல்லை மாவட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு அரசிடமிருந்து நிதிபெறுவதில் இடர்ப்பாடு

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் சொல்கிறார்

ஒட்டுசுட்டான்,டிசெ.6

அழிந்துபோன எமது மாவட்டத்தைக் கட்டி எழுப்ப அரசிடமிருந்து நிதியைப் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இதனால், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாம் நாடிநிற்கின்றோம்.




- இவ்வாறு முல்லை மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் -

மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு அரசிடமிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த இடர்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, இவ்வாண்டு சுமார் 50 மில்லியன் நிதியை அரசு வழங்கியிருந்தது. அதே போன்று அடுத்த வருடமும் புனர்வாழ்வு அமைச்சு 15மில்லியன் ரூபா நிதி வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. எனினும், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் பெருமளவான நிதி வசதியினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்நிதி மூலம் எமது மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். இதற்கு அனைவரதும் முழுமையான ஆதரவு வேண்டும்.

இம்முறை காலபோக நெற்செய்கை விவசாயிகளை நஷ்டத்திற்குள்ளாக்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

எமது மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு 35 மில்லியன் ரூபா தேவை. ஆனால், ஒரு மில்லியன் ரூபா மட்டுமே நிவாரணம் வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டியும், மீள்குடியேற்றத்திற்கு உதவி வழங்கக் கோரியும் அரசிடம் விண்ணப்பித்துள்ளோம்.

தற்போதுள்ள பிரச்சினைகளை எதிர்கொண்டு முற்றாக ஈடுசெய்யாது விட்டாலும் எதிர்காலத்தில் முற்றாக ஈடுசெய்ய நடவடிக்கை எடுப்போம்.

பல்வேறு திட்டங்களுக்கான முன்மொழிவுகளை புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம். குறிப்பாக, இதில் மீள்குடியமர்வு, மீன்பிடி, விவசாயம் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். நியாப் திட்டத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பல குளங்கள் அழிவுறும் நிலையில் உள்ளன. இக்குளங்களை புனரமைப்புச் செய்து விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (எ-204-341)



பூநகரி - கிளிநொச்சி வீதியில் உள்ள குடமுருட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம்:பூநகரிச் செய்தியாளர்)*

# கிளிநொச்சியில் வியாழனன்று 65 விவசாயிகள் கௌரவிப்பு பெறுவர்

கிளிநொச்சி,டிசெ.6

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தினால் கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயத்தை சிறந்த முறையில் மேற்கொண்ட 65 பேர் தெரிவுசெய்யப்பட்டு இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நி.இராசநாயகம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் வெவ்வேறு பிரிவு சார்ந்து கௌரவிக்கப்படவுள்ளோரின் விவரம் வருமாறு

**நீர்ப்பாசனசெய்கையாளர்கள்**

செ.நவரட்ணம் (கிளிநொச்சி), வே.சதீஸ்குமார் (கிளிநொச்சி), ந.கண்ணதாசன் (வட்டக்கச்சி), க.நாகரத்தினம் (பெரியகுளம்), க.சுப்பிரமணியம் (முரசுமோட்டை), சி.நவரத்தினம்(சிவநகர்), நா.தனிநாயகம் (வன்னேரிக் குளம்), து.சத்தியமணி (பல்லவராயன்கட்டு).

**மானவாரி நெற்செய்கையாளர்**

தி.ஜெயசிறி (பூநகரி), கு.செல்லையா (பூநகரி).

**சேதனப் பசளை நெற்செய்கையாளர்**

நா.கதிர்த்திகேசு (இயக்கச்சி), பெ.இராசேந்திரம் (கண்டாவளை).

**மிளகாய்ச் செய்கையாளர்**

செ.தில்லையம்பலம் (வட்டக்கச்சி), க.சிவநாதன் (பிரமந்தனாறு), சி.செல்வராசா (அக்கராயன்குளம்),மா.சிவகுமார் (ஊற்றுப்புலம்), கி.நவரத்தினம் (பல்லவராயன்கட்டு), ச.பசுபநாதன் (பூநகரி), சி.விஜயானந்தன் (பளை).

**மரக்கறிச் செய்கையாளர்**

க.அருளையா (கிளிநொச்சி) - வை.சேதுகாவலர் (கிளிநொச்சி), மா.ஜெகநாதன் (கிளிநொச்சி), ம.அந்தோனி (இராமநாதபுரம்), அ.இராசையா (தம்பிராசபுரம்), செ.நாகேஸ்வரி (புன்னைநீராவி), க.கந்தசாமி (கண்டாவளை), ர.தவமலர் (கிளிநொச்சி), செ.கந்தசாமி (உருத்திரபுரம்), அ.தருமராசா (ஜெயபுரம்), இ.ஜெயபாலன் (கிராஞ்சி). ந.சிவனேஸ்வரன் (முழங்காவில்), க.கனகரத்தினம் (பூநகரி), க.நவரத்தினம் (சோரன்பற்று).

**பழமரச் செய்கையாளர்**

வே.இராசரத்தினம் (கிளிநொச்சி), க.சுபாஸ் (கிளிநொச்சி), மு.களியப்பெருமாள் (இராமநாதபுரம்), கு.இராஜகோபால் (தர்மபுரம் கிழக்கு), இ.தயாகரன் (ஸ்கந்தபுரம்), க.தெய்வேந்திரம் (உருத்திரபுரம்), மா.மாகலிங்கம் (முழங் காவில்), க.நீலயினார் (பளை).

**சுயவிதை உற்பத்தியாளர்**

மா.இராமசாமி (கிளிநொச்சி), என்.எம்.ஜே. அருள் (கிளிநொச்சி), கு.கணேசலிங்கம் (இராமநாதபுரம்), வை.வனேஸ்வரன் (புளியம்பொக்கணை), க.தியாகராசா (முரசுமோட்டை), சி.ஜெகநாதன் (முரசுமோட்டை), சொ.கோபாலசிங்கம் (ஸ்கந்தபுரம்), ம.இராஜகோபால் (உருத்திரபுரம்), அ.பாலகிருஷ்ணன் (பல்லவராயன்கட்டு), க.நல்லதம்பி (நல்லூர் - பூநகரி).

**நடுகைப்பொருள் உற்பத்தியாளர்**

மு.இராசரத்தினம் (கிளிநொச்சி), மு.வேலவன் (கிளிநொச்சி).

**நாற்றுமேடை நாற்று உற்பத்தியாளர்**

நா.நாகராசா (கிளிநொச்சி), சி.பரந்தாமன் (பல்லவராயன்கட்டு).

**பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்தியாளர்**

அ.யேசுமரியன் (கிளிநொச்சி), பி.றணதுங்கா (கிளிநொச்சி), க.நடராஜா (கிளிநொச்சி), த.ஸ்ரீரஞ்சனி (சிவ நகர்), பொ.நாகரத்தினம் (உருத்திரபுரம்).

**நீர்முகாமைத்துவத்துடனான பயிர்செய்கையாளர்**

சர்வேஸ்வரன் (6 ஆம் வாய்க்கால்), செ.மகாலிங்கம் (குமரபுரம்), ம.புவனேந்திரன் (அக்கராயன் (குளம்), ந.ஜீவரட்ணம் (நல்லூர் - பூநகரி), சி.சிறிதரன் (பளை). (எ-203-305)



# ஜி.சீ.ஈ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

## கணிதம்

32 T II

உதயன் ஜி.சீ.ஈ. (சா)தரம் மாதிரிப் பரீட்சைகள் இல. 27

தொகுப்பு:-இரா.அருட்செல்வம்


**முதலாம் வினாவிற்கும் ஏனைய ஏழு வினாக்களுக்கும் விடை தருக.**

(உருளையின் கனவளவு $\pi r^2h$, கூம்பின் களவளவு $1/3\ \pi r^2h$)
(கோளக் கனவளவு $4/3\pi r^3$, $\pi$-22/7)

I) a, 1. $a^3$-8, a-2 இன் பொ.ம.சியைக் காண்க.
2. $2/a^3 - 8 + 3/a^2 + 2a + 4$ சுருக்குக.
3. $\frac{a-2}{a^3-8}$ சுருக்குக.

b. 1. $\frac{(8x^{-3})^{1/3}}{\sqrt{4y^{-2}}}$ விடையை சுருக்கி நேர் சுட்டியில் தருக.
2. $\log_{10} 5 + \log_{10} 40 - \log_{10} 2$ இன் பெறுமானம் யாது?

c. 8% பங்கு லாபம் கொடுக்கும் யாழினி அன் கம்பனி ஒன்றின் 10/= பங்குகளை ஒருவன் 8/= படி வாங்குவதால் ஆண்டு வருமானமாக 720/= ஐ பெறுகின்றான்.
a. அவன் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரையான பெறுமானம் யாது?
b. முதலீடு செய்த தொகை யாது?
c. பங்குகளை 10% கட்டணத்தில் அவன் ஆண்டு முடிவில் விற்பனையின் விற்பனை மூலம் அவன் பெறும் மொத்த வருவாய் எவ்வளவு ஆகும்?




உருவில் ABC ஒரு முக்கோணி ஆகும். DE என்பவை AB, AC இன் நடுப்புள்ளிகளாகும். DF ஆனது F வரை நீட்டப்படுகிறது. BA//CF
பின்வருவனவற்றை கணிக்க.

1. $B\hat{C}E$ 2. $E\hat{C}F$ 3. DE, BC இற்கும் உரிய தொடர்பு.
4. $\triangle$ADE $\triangle$ECF ஒருங்கிணையும் நிபந்தனையாது?

e. 1. ஒரு செவ்வகத்தின் நீளம் அகலத்திலும் 3m அதிகமாகும் செவ்வக நீளம் x எனக் கொள்க.
a. செவ்வகத்தின் அகலம் யாது?
b. செவ்வகத்தின் பரப்பு y ஆயின் அதற்கான ஒரு கோவை பெறுக.

| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|---|
| y | 10 | 4 | | | | 0 | 4 | 10 |

மேற்படி தொடர்புக்கு இந்த அட்டவணையை பிரதீயீடு செய்து இரு அச்சுக்களிலும் 10 சிறு பிரிவுகளை எடுத்து வரைபு ஒன்றை வரைக. வரைபிலிருந்து செவ்வகத்தின்.
1. இழிந்த பரப்பு யாது எனக் காண்க.
2. மேற்படி பெறுமானம் பற்றி உமது விளக்கம் யாது?

f. 1. 20, 50, 80, 60, 70, 90, 60, 60, 70 ஈட்டுக்களின் ஆகாரம், இடையம், காலணை இடை வீச்சு என்பவற்றை காண்க.
2. ஒரு வகுப்பில் உள்ள 50 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளின் பரம்பல் வருமாறு.

| புள்ளி | 4-8 | 8-12 | 12-20 | 20-24 | 24-36 | 36-40 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 5 | 7 | 8 | 6 | 15 | 3 |

1. இப் பரம்பலுக்கான ஒரு வலையுரு வலையம் வரைக.
2. இதற்கான மீடிறன் பல்கோணி வரைக.


02) 1. $4x^2 - 9y^2 + 2x - 3y$ காரணி ஆக்குக.
2. $3/a + 5/b = 37$
$7/a - 3/b = 13$ } தீர்க்குக.
3. ஒரு மாம்பழத்தின் விலையை 1 ரூபாவால் குறைத்தால் 60 ரூபாவுக்கு 3 பழம் கூடுதலாக வாங்கலாம்.
a. ஒரு மாம்பழத்தின் முன்னைய விலை x எனக் கொண்டு 60/= ரூபாவுக்கு வாங்கக் கூடிய பழங்களின் எண்ணிக்கை x இல் காண்க.
b. மாம்பழத்தின் தற்போதைய விலை x இல் கண்டு தற்போது வாங்ககூடிய பழங்களின் எண்ணிக்கையை x இல் காண்க.
c. பொருத்தமான ஓர் இருபடிச் சமன்பாட்டை அமைத்து x ஐ அறிக.

03)
01. ஒரு கனவுருத் தாயக்கட்டையும் நான்முகித் தாயக்கட்டையும் ஒருங்கே எறியப்படுகின்றன. இத் தகவலுக்கான மாதிரி வெளியை தெக்காட்டித் தளத்தில் புள்ளி வரைபு ஆக்குக இதிலிருந்து.
1. இலக்கங்களின் கூட்டுத்தொகை 5 ஆக இருக்கும் நிகழ்தகவு.
2. இலக்கங்களின் கூட்டுத்தொகை ஒற்றை எண்ணாக இருக்கும் நிகழ்தகவு யாது?

04. 1. விருத்தி ஒன்றின் n ஆம் உறுப்பு Tn = 5n - 2 ஆகும்.
அ. இது எவ்வகையான விருத்தி எனக் கூறுக.
ஆ. இவ் விருத்தியின் 15 ஆவது உறுப்பு யாது?
இ. 366 ஐ கூட்டுத்தொகையாகப் பெற எத்தனை உறுப்புக்கள் எடுக்கப்பட வேண்டும்.
2. பெருக்கல் விருத்தியில் முதலாம் மூன்றாம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை 20 ஆகும் இரண்டாம் உறுப்பு 6 ஆகும்.
1. விருத்தியின் பொதுவிகிதம் முதல் உறுப்பு
2. 6560 ஐ கூட்டுத்தொகையாகப் பெற எத்தனை உறுப்புக்கள் எடுக்கப்படல் வேண்டும்.

05. ஒரு நேர்விளிம்பு கவராயம் cm/mm அளவுகோல் என்பவற்றைப் பயன்படுத்தி
1. PQ = 6.2 cm QR = 5.8 cm $P\hat{Q}R$ = 75⁰ ஆகவுள்ள முக்கோணி $P\hat{Q}R$ஐ அமைக்க.
2. PQ இற்கு சமாந்தரமாக R இன் ஊடாக RS = 5.8 cm ஆகுமாறு ஒரு நேர் கோட்டை வரைக - இதிலிருந்து நாற்பக்கல் PQRS ஐ பெயரிடுக.
3. மூலைவிட்டம் QS ஐ இணைத்து நீளத்தை அளந்து எழுதுக.
4. QS இற்கு சமாந்தரமாக R இனூடு ஒரு நேர்கோடு வரைக அது நீட்டப்பட்ட PQ ஐ T இல் சந்திக்கட்டும்.
5. நாற்பக்கல் PQRS, இற்கு சமபரப்புடைய முக்கோணி ஒன்றை வரைக.

06)





இந்தக் கண்ணாடிக் குவளையொன்று 21cm விட்டம் உள்ள உருளை வடிவமானது. இதன் உயரம் 30cm ஆகும். உள்ளே அதே விட்டம் உடைய, உயரம் 18cm உடைய கூம்பு ஒன்று கண்ணாடியில். இந்தக் குவளை நீரால் நிரப்பப்பட்டுள்ளது.
1. இக் குவளையில் ஊற்றக் கூடிய நீரின் கனவ எவு யாது?
2. 9cm ஆரையும் மேல் விளிம்பிலிருந்து 1 cm கீழே உள்ள மட்டத்திற்கு நீரை கொண்டது மான உருளை வடிவப் பாத்திரம் ஒன்றினுள் 1 cm விட்டமுள்ள இரும்புக் கோளங்கள் இடப்படுகிறன. இவ் வகையான எத்தனை கோளங்கள் இட்டால் நீர் மட்டம் மேல் விளிம்பு வரை மட்டும் மட்டாய் உயரும்.


(r- ஆரை, h- உயரம் கொண்ட உருளையின் கனவளவு $\pi r^2h$, கோள கனவளவு $4/3\ \pi r^3$, $\pi = 22/7$

07) 1. வட்ட நாற்பக்கல் ஒன்றின் எதிர்க் கோணங்கள் மிகை நிரப்பி ஆகும் என நிறுவிக் காட்டுக.
2. மேற்படி தகவலை அடிப்படையாகக் கொண்டு வட்ட நாற்பக்கலின் புறக்கோணம் அகத்தெதிர் கோணத்திற்கு சமன் என நிறுவுக.

3.





உருவில் O மையம் ஆகும்
1. $A\hat{C}B$, AOB இற்குரிய தொடர்பைத் தருக.
2. AO// BC ஆயின் $A\hat{X}B$ - 3$A\hat{C}B$எனக் காட்டுக.





1. உருவில் $\triangle$ACE, $\triangle$DBE இயல் பொத்தவை எனக்காட்டுக.
2. AE. ED = BE.EC எனக்காட்டுக.

08) ஒரு மனிதன் 2 ஆண்டுகளில் கடனைத் தீர்ப்பதற்கு உறுதியளித்து 10% கூட்டு வட்டிக்கு 50,000/= ஐ கடனாகப் பெற்றுக்கொண்டார்.
1. வருட முடிவில் செலுத்த வேண்டிய வட்டித்தொகை யாது?
2. இரு ஆண்டுகளின் இறுதியிலே கடனை தீர்க்க வேண்டுமாயின் அவர் செலுத்த வேண்டிய முழுத் தொகை எவ்வளவு?
3. தான் கூறியவாறு 2 ஆண்டுகளின் இறுதியிலே கடனைத் திரும்பிக் கொடுக்க மனிதன் தவறுகின்றான். கடனைத் திருப்பிக்கொடுக்க மேலும் 6 மாதங்கள் பிந்துகிறது. இப்போது 64130/= ஐ கொடுத்து கடனில இருந்து தன்னை விடுத்துக கொண்டார் ஆயின் 6 மாத காலத்திற்கு அறவிட்ட வட்டி நூற்று வீதம் யாது?
4. அவர் ஒருவருடம் முடிவில் வட்டியும் முதலுமாக பெற்ற தொகையை 12% பங்குலாபம் கொடுக்கும் 10/= பங்குகளை 11/= இற்கும் வாங்க முதலீடு செய்திருப்பாராயின் அவருக்கு ஓர் ஆண்டின் இறுதியில் கிடைக்கும் வருமானம் யாது?

09) ஒரு முக்கோணியின் ஒரு பக்க நடுப்புள்ளியூடாக இன்னொரு பக்கத்திற்கு வரையும் சமாந்தரம் மூன்றாம் பக்கத்தை இரு சமகூறிடும் என நிறுவுக.





உருவில் ABC ஒரு முக்கோணி ஆகும். ABயின் நடுப்புள்ளி X ஆகும். CX இன் நடுப்புள்ளி y ஆகும். நீட்டப்பட்ட BY ஆனது AC ஐ Z இல் சந்திக்கிறது.
01. AZ = 2CZ என நிறுவுக.




உருவில் M,N PQ. PR இப் புள்ளி நடுப்புள்ளி ஆகும். PR ஆனது NR= RS ஆகுமாறு நீட்டப்பட்டுள்ளது.
1. MZ = ZS எனக்காட்டுக?
2.. ZR = 1/4 QR எனக் காட்டுக.

10)




உயர் மாடிக் கட்டடம் ஒன்றில் மேல்மாடியிலிருந்து Pஎன்னும் புள்ளியில் இருந்து S இன இறககக் கோணம் 18⁰20" ஆகும். 60m ஐ கடந்து கீழிறங்கி புள்ளி Q இலிருந்து பார்க்கும் போது S இன் இறககக் கோணம் 10⁰30' ஆகும்.

1.. உருவை பூர்த்தி செய்க.
2. QR = h எனவும் RS = a எனவும் கொண்டு a,h இலான சமன்பாடுகளை எழுதுக.
3. a,h. ஐ காண்க.

# தெரிவுசெய்யப்பட்ட 74 பாடசாலைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் நூல்கள்

திருகோணமலை,டிசெ.6

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 74 தமிழ்மொழி மூலப் பாடசாலை நூலகங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நூல்கள் வழங்கப்படவுள்ளன என மாகாண நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை நூலகங்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலும் -

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை நூலகங்களுக்கு நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தென்மராட்சிக் கல்வி வலயத்திலும் வைத்து இந் நூல்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 27 பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

தென்மராட்சி டிறிபேர்க் கல்லூரி, சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா வித்தி., மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், நாவற்குழி ம.வி., உசன் ராமநாதன் ம.வி., மீசாலை விக்னேஸ்வரா ம.வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., அல்லாரை அரசினர் தமிழ் வித்தி. -

எழுதுமட்டுவாழ். கணேச வித்தி., கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி குருசாமி வித்தி., கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தி., சந்திரமௌலிச வித்தி., மந்துவில் கமலாசினி வித்தி., மந்துவில் அ.மி. தமிழ்க்கலவன் பாடசாலை -

மந்துவில் வடக்கு சரஸ்வதி வித்தி., மந்துவில் சிறிபாரதி வித்தி., மறவன்புலோ சகலகலாவல்லி, மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சரசாலை சிறிகணேசா வித்தி.-

விடத்தற்பளை கமலாசினி வித்தி., எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க்கலவன் வித்தி., இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தி., கைதடி நாவற்குழி தமிழ்க்கலவன் பாடசாலை, மந்துவில் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.

நூல்கள் பெறும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், சன்மார்க்க மகா வித்தியாலயம், சென். சாள்ஸ் மகா வித்தி., புனித ஜேம்ஸ் மகா வித்தி., வைத்தீஸ்வராக் கல்லூரி, கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தி., கொழும்புத்துறை துரையப்பா வித்தி., கொட்டடி நமசிவாயம் வித்தி., நல்லூர் வடக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா -

நாவந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, சென். அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, சென்.மேரிஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, சென். றொக் றோமன் கத்தோலிக்க வித்தி., வண்ணை நாவலர் மகாவித்தி., செங்குந்த இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி மகா வித்தி., அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி. -

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி., கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தி., கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி., கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி., கோண்டாவில் இந்து மகாவித்தி., கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தி., நல்லூர் இந்து தமிழ் மகளிர் பாடசாலை, நல்லூர் ஸ்தான சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலை, நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி,

யாழ். இந்துக் கல்லூரி, உயரப்புலம் மெ.மி. தமிழ்க்கலவன் பாடசாலை, அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கலட்டி மெ.மி.தமிழ்க்கலவன் பாடசாலை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தி., இளையதம்பி இந்து வித்தி., பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அச்சுவேலி மகா வித்தி., அத்தியார் இந்துக் கல்லூரி -

கோப்பாய் மகா வித்தி., அச்செழு சைவப்பிரகாச மகா வித்தி., அச்சுவேலி சரஸ்வதி வித்தி., அச்சுவேலி சென். தெரேசா மகளிர் கல்லூரி, ஆவரங்கால் மகாஜனா வித்தி., நடராஜா இராமலிங்கம் வித்தி., கோப்பாய் சரவணபவானந்தா வித்தி., புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி., ஊரெழு கணேஷா வித்தி., உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி., வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி. -

மேற்படி பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் வந்து நூற் பொதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - வருகை தரும்போது நூலகப் பொருள் பதிவேட்டுப்புத்தகத்தையும் உத்தியோக முத்திரையையும் தவறாது கொண்டு வரவேணடும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.(எ-204-203)


## நூல் வெளியீட்டு விழா

இராசையா நாகேந்திரராஜாவின் 'சைவன்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம அதிதியாகக் கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன், வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், செ.கஜேந்திரன், ஜி.ஜி.கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராஜா, கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நூலின் வெளியீட்டுரையை மந்திகை மருத்துவமனைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை நிகழ்த்துவார். (எ-78)

ஊரெழு ஸ்ரீ சத்யசாயி மண்டலியினரால் புதிதாக நிறுவப்பட்ட பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற பகவான் பாபாவின் 79ஆவது அவதார தின விழாவில் சாயி பக்தர்கள் கூடியிருப்பதையும் வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் வே.சேனாதிராஜா சிறப்புரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

# இந்த வார இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | சந். |
| | சூரி. ▲ புதன் | வெ. செவ். கே. | வியா. |

## 06-12-2004 - 12-12-2004

**மாற்றம்:**
நட்சத்திரம் பூரம் - சந்திரன் சிங்க இராசியில் நிற்கும்.

### மேடம்

புத்திர சோகம், இடமாற்றம், திட்டமிட்டு எதையும் செய்யமாட்டீர்கள். எதிர்ப்பாலாரால் தொல்லை, பண வரவு சுமாராக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் மீது தப்பபிப்பிராயம் கொள்ளுவார்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### இடபம்

காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளுங்கள். பெரியவர்கள் உதவுவார்கள். மாமன், மைத்துனர் உதவி செய்யலாம். பிரயாண வசதி ஏற்பட இடமுண்டு. எதிர்ப்பாலாருக்கு நோய், அதனால், பொருள் செலவு அதிகரித்தல். உறவினர்கள் வருவார்கள். கை, கால் தாக்கங்கள் வர இடமுண்டு. கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

திட்டமிட்ட காரியங்கள் தாமதமடையும். விஷ பீடைகள், மருந்துச் செலவுகள் அதிகரித்தல், தாய் வழியில் மாமன் முறையில், சில இழப்புகளை அடைவதனால் மிகுந்த கலகத்தை அடைவீர்கள். இடம் மாறி நன்மை அடையலாம். பண வரவு தாமதமாகும். சளி, காய்ச்சல் கொடுக்க இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### கடகம்

வாக்குக் கலகம், அடிக்கடி மனமாற்றம், அதிக செலவுகளால் மனப்பயம், வீண் பழி கேட்டல், வயிற்று நோ, காயங்கள் வரலாம். பிடிபாடு அரச தண்டனை கொடுக்க இடமுண்டு. வெளிநாட்டிலிருந்து நற் செய்திகள் வரும். மாமன் வழியினர் உதவிகள் செய்வார்கள். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

புதிய திட்டமிட்டு வெற்றி அடைவீர்கள். சளித்தொல்லை, காய்ச்சல் வரலாம். தொழில் சிறப்பு, பணவரவு, போக்குவரத்தில் இழப்புகள் வர இடமுண்டு. இனஜனங்கள் உதவி செய்வார்கள். புதிய நண்பர்கள் உதவி செய்வார்கள். கால் உளைவு சிலசமயம் வர இடம் உண்டு. தூரப்பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### கன்னி

தொழில் சிறப்பு, பெரியவர்களின் உதவிகள் கிடைத்தல், அயலவர்கள் கோவிப்பார்கள். அடிக்கடி பொருள் பற்றிய மனப்பயம் ஏற்படும். ஆனால், பண வரவு, பழைய பாக்கிகள் வர இடமுண்டு. பொருளைக் கொடுத்து ஏமாறுதல், நண்பர்களை நம்பவேண்டாம். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். பிரயாணங்கள் சாதகமாக இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

புதிய திட்டங்களால் நன்மை ஏற்படல், எதிர்ப்பாலார் உதவிகள் செய்தல், அதிகம் கதைத்துக் கதைத்துக் காரிய மாற்றுவீர்கள். தர்மச் செலவுகள் விழுதல், காலில் காயம் வரலாம். கண் கூச்சம், பண வரவு, திடீர் பிரயாண யோசனை ஏற்படல். சட்டம் தொடர்பானவர்கள், குருத்தொழில், பிரயாணத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

வெளிப்படையாகப் பேசிப் பலரின் எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். பண வரவு, இனஜன உதவி, காலில் காயம், வயிற்றில் உபாதைகள், குளிரால் விறைப்புக் கொடுக்கும். புதிய திட்டங்கள், இடமாற்றங்கள் வெற்றியைத் தரும். அட்டமத்துச் சனியால் மனம் வேதனை ஏற்பட்டபடி இருக்கும். வியாபாரிகளுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### தனுசு

தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்கு மத்தியில் வெற்றி அடைவீர்கள். பண வரவு உண்டு. எதிர்ப்பாலாருக்கு நோய், பொருள் செலவு அதிகரிக்கும். கண் நோ, கிருமித்தாக்கங்கள் வர இடமுண்டு. மறைமுகப் பகைவரால் எதிர்த்தாக்கங்கள் ஏற்படலாம். வியாபாரிகள், நிர்வாகத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வெள்ளி, ஞாயிறு.*

### மகரம்

புதிய தொழில் வாய்ப்பு, சகோதர உதவிகள் கிடைத்தல், மனப் போராட்டம் ஏற்படல், இடமாற்றங்கள் சிலருகக்கு நன்மைகள் கொடுக்கும். புதிய பொருள்கள் வாங்குதல், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். ஆசிரியர்கள், வியாபாரிகள், சந்தை வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், ஞாயிறு.*

### கும்பம்

அட்டமத்தில் வியாழன் பொருளைப் பறிக்கும். பிரயாணம் எனப் பொருள் விரயமாகும். பிறரிடம் பொருளைக் கொடுத்து ஏமாறாமல் இருக்கவும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பொருள் வரவு கொடுக்கும். நண்பர்களால் காரியம் கைகூடும். உரசல் காயங்கள் கை, காலில் ஏற்பட இடமுண்டு. ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள் ஆகியோருக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், ஞாயிறு.*

### மீனம்

திட்டமிட்டு எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்படும். பெரியவர்கள் உதவி செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு இருக்கும். கை, காலில் காயங்கள் வாகனத்தால் வர இடம் உண்டு. தடைதாமதம் வரும். சளித் தொல்லை கொடுக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரிகள், மருந்து, வைத்தியத்துறைகளைச் சேர்ந்தவர்கள், கடல் தொழிலாளர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், ஞாயிறு.*

**மகாதேவா ஜோதிடம்**

# காப்புறுதி சிறப்பிதழ் – 06.12.2004

## காப்புறுதி தொடர்பான அடிப்படைக் கருத்துக்கள்

எதிர்காலமானது நிச்சயமற்ற தன்மையைக் கொண்டது. அத்துடன், ஆபத்தும் (Risk) கூடியது. ஒருவர் எதிர்காலத்தில் பல்வேறு வகையான ஆபத்துக்களை எதிர்நோக்கமுடியும். ஒருவருடைய ஆயுளுக்கு ஆபத்து ஏற்படலாம். அவருடைய பெறுமதிமிக்க சொத்துக்களுக்கு ஆபத்து ஏற்படலாம். இத்தகைய இழப்பீடுகளை ஈடுசெய்வதற்குக் காப்புறுதி உதவுகின்றது. காப்புறுதி எனப்படுவது ஒருவர் தனது ஆயுளுக்கு அல்லது சொத்துக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் இழப்பீடுகள் தொடர்பாக, நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் காப்புறுதி ஸ்தாபனத்துடன் ஓர் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் காப்புறுதி எனப்படும். காப்புறுதி ஒப்பந்தத்துடன் மூன்று வகுதியினர் தொடர்பு உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

1. முதலாம் நபர்
2. இரண்டாம் நபர்
3. மூன்றாம் நபர்

இழப்புக்களைப் பொறுப்பு ஏற்கும்படி விண்ணப்பிப்பவர் முதலாம் நபர் எனவும், இழப்பினைப் பொறுப்பு ஏற்பவர் இரண்டாம் நபர் எனவும், மேற்குறிப்பிட்ட பிரிவுகள் தவிர்ந்த ஆனால், காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நட்டஈடுபெறத் தகுதி உடையவர் மூன்றாம் நபர் எனவும் வரையறுக்கப்படுகின்றனர்.

வியாபாரத்தின் துணைச்சேவைகளில் ஒன்றான காப்புறுதியின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்கின்றது. முதலீடுகள் அதிகரித்துச் செல்கின்ற வேளையில் முதலீடுகள் தொடர்பான ஆபத்துக்கள் (Risks) அதிகரித்துக் காணப்படும். எனவே, இத்தகைய ஆபத்துக்களை ஈடுசெய்யக்கூடிய காப்புறுதி மிகவும் முக்கியமானதாகும். காப்புறுதி இன்றி எந்த ஒரு தொழில் முயற்சியிலும் முதலீடு செய்வது புத்திசாலித்தனமானதல்ல.

ஒருவர் தனது ஆயுள் தொடர்பாகவோ சொத்துக்கள் தொடர்பாகவோ பல்வேறு வழிகளில் ஆபத்துக்களை எதிர்நோக்கலாம். எந்த வழிகளில் இழப்புக்களை எதிர்நோக்கக்கூடிய சாத்தியங்கள் உண்டோ, அவ் இழப்பீடுகளுக்கு எதிராகக் காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும். எனினும், சில வகையான இழப்பீடு களுக்கு எதிராகக் காப்புறுதி செய்ய முடியாது. இவ் இழப்பீடுகள் "காப்புறுதி செய்யமுடி யாத இடர்கள்" (Non Insurable Risks) என அழைக்கப்படுகிறது. பின்வரும் இழப்பீடுகளுக்கு எதிராகக் காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியாது.

1. அளவீடு செய்யமுடியாத நட்டங்கள்
2. முகாமையின் திறமையீனத்தினால் ஏற்படும் நட்டங்கள்.
3. சந்தை மாற்றங்களினால் ஏற்படும் நட்டங்கள்.
4. அடிக்கடி ஏற்படும் சிறிய நட்டங்கள் உதாரணமாக ஒரு ஹோட்டலின் கண்ணாடிப்பாத்திரங்கள் உடைவது.
5. அடிக்கடி ஏற்படாத பாரிய இழப்புக்களுக்கு எதிராகவும் காப்புறுதி செய்ய முடியாது.

இந்தவகையில், ஆயுள் காப்புறுதி மட்டும் ஒப்புறுதி எனவும், ஏனைய எல்லாக் காப்புறுதிகளும் அபாயக் காப்புறுதி எனவும் அழைக்கப்படுவதுண்டு. இந்த வகையில் இரு வகையான் காப்புறுதி வகைகள் உண்டு எனக் கூறுவது பொருத்தமானதாகும். இவ் இரு வகையான காப்புறுதி வகைகளிற்கும் இடையில் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுண்டு. அவையாவன.

1. ஆயுட் காப்புறுதிக்கு இழப்பீட்டுக்கு உறுதித் தத்துவம் பொருத்தமற்றது.

பொதுவாக மேற்குறிப்பிட்ட இழப்பீடுகள் தவிர ஏனைய இழப்பீடுகளுக்கு எதிராகக் காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும்.

### காப்புறுதித் தத்துவங்கள்

காப்புறுதி தொடர்பான ஒவ்வொரு ஒப்பந்தங்களும் சில தத்துவங்களின் அடிப்படையால் மேற்கொள்ளப்படுகின்றன.

அவையாவன,

1. உச்ச நம்பிக்கை
2. காப்புறுதி செய்யக்கூடிய உரிமை
3. இழப்பீட்டுத் தத்துவம்
4. அண்மைக் காரணங்கள்

**1. உச்ச நம்பிக்கை**

காப்புறுதி தொடர்பான எல்லா ஒப்பந்தங்களும் இந்தத் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தத்துவத்தின்படி இழப்புக்களைப் பொறுப்பேற்கும்படி விண்ணப்பிப்பவர், அதாவது காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்பவர் ஆபத்துத் தொடர்பான சகல தகவல்களையும் ஒளிவுமறைவின்றிக் கூறுதல் வேண்டும். இதன்படி படிவங்களில் கேட்கப்படும் வினாக்களுக்கு மட்டும் உண்மையான தகவல்களை வழங்குவதுடன் நின்றுவிடாது, இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதில் தாக்கத்தினை ஏற்படுத்தும் சகலவகையான தகவல்களையும் ஒளிவுமறைவின்றி எடுத்துக் கூறுதல் வேண்டும் என்பது கருத்தாகும். காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் போது மட்டுமன்றி, புதுப்பிக்கும் போது கூட இத் தத்துவம் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். உச்ச நம்பிக்கைத் தத்துவம் மீறப்படும்போது, ஒப்பந்தம் வலுவிழக்கப்படுவது மட்டுமன்றி, இழப்பீட்டினைப் பெறமுடியாத நிலையும் ஏற்படுகின்றது.

**2. காப்புறுதி செய்யக்கூடிய உரிமை**

ஒருவர் மீது அல்லது சொத்தின்மீது சட்டரீதியான உரிமையைக் கொண்டிராத ஒருவர் ஓர் ஆபத்திற்கு எதிராகச் சட்டரீதியாகக் காப்புறுதி செய்யமுடியாது.

**3. இழப்பீட்டுத் தத்துவம் அல்லது நட்டத்தினை ஈடுசெய்யும் கோட்பாடு**

இழப்பீட்டுத் தத்துவம் எனப்படுவது ஒரு சொத்துக்கு இழப்பு ஏற்படும்போது இழப்பானது கணிப்பிடப்பட்டு இழப்பீடு வழங்கப்படும் என்பது கருத்தாகும். ஆயுளுக்கு இழப்பு கணிப்பிடப்பட முடியாதது. எனவே, இத் தத்துவம் செல்லுபடியற்றதாகும்.

**4. அண்மைக்காரணங்கள்**

இதன்படி, எவ் ஆபத்திற்கு எதிராகக் காப்புறுதி செய்யப்பட்டதோ, அவ் ஆபத்தினால் அல்லது அதனுடன் தொடர்புடைய காரணங்களினால் ஏற்படும் இழப்புக்களையே காப்புறுதி ஸ்தாபனம் ஈடுசெய்யும் என்பது கருத்தாகும்.

வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகயான காப்புறுதி ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. ஒரே நாட்டில் கூட வெவ்வேறு வகையான காப்புறுதி ஸ்தாபனங்கள் வெவ்வேறு வகையான காப்புறுதி ஒப்பந்த வசதிகளை வழங்குகின்றது. ஆனால், எல்லாவகையான நிறுவனங்களைப் பொறுத்தும் இக் காப்புறுதித் தத்துவங்கள் ஒன்றேயாகும். காப்புறுதி தொடர்பான மோசடிகளைத் தவிர்க்கும் பொருட்டு காப்புறுதி மூலம் மக்கள் உண்மையான பலாபலன்களை அனுபவிக்கச் செய்யும் பொருட்டும் இத் தத்துவங்கள் முக்கியமாகக் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நன்றி: வணிக வனிதை**
**(யா/இந்து மகளிர் கல்லூரி)**

**இன்றைய காப்புறுதி நாளைய நம்பிக்கை**



இல. 10, (8ம் மாடி), ஸ்ரீ உத்ராநந்த மாவத்தை, (முன்பு ஆர்.ஏ. டி மெல் மாவத்தை), கொழும்பு 3. தொலைபேசி: 2421885-7 தொலைநகல்: 4713800 மின்னஞ்சல்: hnbassur@sltnet.lk


SHIFT TO FULL OPTION !
The only Motor Insurance that covers you and your vehicle
On site claim approval, no police reports needed.
Rs. 2,500/- a day up to Rs. 50,000/- for hospitalisation.
A replacement car if required or cash in lieu.
The Janaratha Call Centre that is at your service, 24 hours a day.
A special sum in case of death to a pedestrian or occupant.
Provision of a tow truck at a reasonable cost.
JANARATHA FULL OPTION
From Janashakthi
Janashakthi Insurance, showing its care and concern for you and your vehicle, now brings you Janaratha Full Option - a motor insurance cover that assures you peace of mind.
JANASHAKTHI INSURANCE
JANASHAKTHI for INSURANCE
JANARATHA FULL OPTION YOUR TRUSTED FRIEND
Call the Janaratha Full Option Call Centre toll free on 2303300

# 600 சமுர்த்தி அலுவலருக்கு உடனடியாக நிரந்தர நியமனம்

கொழும்பு, டிசெ.6

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி 600 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று இலங்கை வானொலிச் செய்தி தெரிவித்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி மாத்தறைப் பகுதியில் தொடரான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தனது ஆட்சிக் காலத்தில் ஆற்றிய சேவையினைப் பாராட்டும் முகமாகவே இந்நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாத்றை ராகுல வித்தியாலயத்தில் ஒரு வார காலம் தொடர்ந்து நடைபெறவுள்ள பாராட்டு நிகழ்வுகளுக்கான அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவினையொட்டி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. அதில் முதற்கட்டமாக 600 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனமாக்கப்படவுள்ளனர்.

(ஜ-13)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பன எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறவுள்ளன.

விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொள்வார்கள்.

(ஜ-135)

# விவசாய, கால்நடை அபிவிருத்திக்கு உதவி

கொழும்பு,டிசெ.6

யாழ். மாவட்டத்தில் விவசாய, கால்நடை அபிவிருத்திக்கு உதவிகளை வழங்க விவசாய அமைச்சர் முன்வந்துள்ளார்.

என்னவகையான உதவிகளை வழங்கலாம் என்பது குறித்து ஆராய விசேட கூட்டம் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை விவசாய அமைச்சில் அவர் கூட்டுகின்றார்.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தேவைகள் தொடர்பாக விளக்கம் அளிப்பர்.

(ஜ-3)


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தினால் நவம்பர் 22 முதல் 30 வரையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த புத்தக விற்பனையை பொதுநிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573

(C/39459) (42-14-18-26)


## துயர் பகிர்கின்றோம்

கடந்த 01-12-2004 இல் இயற்கையெய்திய

**கு.வை.முத்தையா**

(முன்னாள் அறங்காவலர் சபை உறுப்பினர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களது துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

உறவினர் -
சிவயோகராணி கதிரவேலு (J.P.)
குடும்பத்தினர்.

பாடசாலை ஒழுங்கை,
சித்தன்கேணி.

(39261)(26-14-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
*திருமதி அஞ்சலீன் அமலநாயகம்*
அவர்களின் அன்புத் தந்தை

**அந்தோனிப்பிள்ளை பேரின்பநாதன்**

அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களது மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை,
மானிப்பாய்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்.*

(39280)(26-14-18)


## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 2004-12-11 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 2004-12-18 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 2005-01-08 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதி. |
| 2005-01-22 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |
| 2005-01-29 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை. |
| 2005-02-05 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்" இலங்கை மின்சார சபை.

(சி-39499) (26-14-18) எனது இல. வமா/யா/வ/விளம்.



## புதிய வகுப்புகளுக்கான புதிய அனுமதிகள்

டிசெ. 10 வரை மட்டுமே வழங்கப்படும்

The Express Institute
Irupalai, Kopay. - அதிபர்.

(3938)



## அலுவலகக் கட்டடம் வாடகைக்கு

தேசிய வீடமைப்பு செயலகக் கட்டடத்தின் அலுவலகப் பாவனைக்குரிய இரண்டாம் மாடித்தளம் 7022 சதுரஅடி (கச்சேரிக்கு முன்பாக) வாடகைக்கு விடப்படவுள்ளது. பெறவிரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**சு.மாசிலாமணி,**
மாவட்ட முகாமையாளர்,
தே.வீ.அ.அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 021 222 2039,
021 222 6941

(C/39439)(42)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், ரீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459.

(39287)


## 7ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தேவரன், புலோலி.

**அமரர் கதிர்காமத்தம்பி சிவநாதன்**

(உரிமையாளர், ராணிபேக்கரி, ஓராங்கட்டைச் சந்தி, பருத்தித்துறை)

தோற்றம்: 09-12-1944 மறைவு: 01-12-1997

திதி: 06-12-2004

கண்ணை இமைகாப்பது போல
எமைக்காத்த எம்முயிரே!
காலமெல்லாம் உம்நினைவில் வாழ்ந்திடும்

*அன்பு மனைவி, பிள்ளைகள், மைத்துனர்.*

(சி-39496)(26-14-18)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 12 - 1940



இறப்பு 06 - 12 - 2001

**அமரர் சின்னையா கனகசபை** (யப்பான்)

(பிரபல வர்த்தகர்)

*பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்*
*குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து*
*எங்கள் வாழ்க்கைக்கு நல்வழி காட்டி*
*நல்வாழ்வு வாழ வைத்த எம் அன்புத் தெய்வமே!*
*உங்கள் நினைவுகள் என்றும் - எம்*
*நெஞ்சங்களை விட்டகலாது!*

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
T.P.:0712 384484.

(39281)(26-14-18)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 635 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 03-12-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5108139-5123927 |

வெற்றி இலக்கங்கள்
**15 24 48 49**

லக்கினம் துலாம்

ஜக்பொட் பரிசு
ரூபா.46,91,000/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 54,66,750/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,47,472 | 10/- | 34,74,720/- |
| 2.இலக்கங்கள் | 31,918 | 20/- | 6,38,360/- |
| 1.இல + லக்கினம் | 31,615 | 30/- | 9,48,450/- |
| 2.இல + லக்கினம் | 2,868 | 100/- | 2,86,800/- |
| 3.இலக்கங்கள் | 860 | 500/- | 4,30,000/- |
| 3.இல + லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 46,91,000/- | - |
| மொத்தம் | 4,14,820 | - | 76,98,580/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,98,580/-

தொடர் இல. 4146656 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 07ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5119766-5-52
5111314-9-79
5113979-6-41
5111783-1-78
5109664-1-30




# எய்ட்ஸ் தினம் மற்றும் கொடிவாரம் சிறப்புற பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்

TRRO Ltd (சி-39451) (26-14-18) FORUT UNHCR

# இது தமிழருக்கும் சொந்தமான தீவு என்பதை உணர்த்தியவர்கள்

## மாவீரர்களுக்கு அஞ்சலி



நல்லூர்,டிசெ.6

1948 இற்குப் பின்னர் நாகரிகமற்ற கொலை வெறிக்கு உட்பட்ட ஆட்சிக்குள் வீழ்ந்து கிடந்த தமிழினம், இது சிங்களவருக்குச் சொந்தமான தீவு அல்ல தமிழர்களுக்கும் உரியது என்பதை உலகிற்கு உணர்த்தியவர்கள் மாவீரர்கள்.

- இவ்வாறு தூயவன் அரச அறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா கூறினார்.

யாழ்.மாவட்ட வெண்மை வாணிபச் சங்கங்களின் சமாசத்தின் ஆதரவில் அதன் செயலாளர் இ.இராமச்சந்திரன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அரசண்ணா மேலும் பேசும்போது கூறியதாவது:-

இது தமிழர்கள் எதிர்பார்க்கும் முக்கிய விழா உலகத்தின் உன்னதங்களைப் போற்றி நாம் எல்லோரும் கொண்டாடும் மதிப்புமிக்க விழா இது. அதிகமான விலை கொடுக்க இந்தச் சிறிய இனத்தால் இன்றைய நிலையை உருவாக்க முடிந்திருக்கின்றது.

தமிழர் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கிய தீவுப்பகுதிப் பிரதிநிதியாக இருந்த நவரத்தினம் அவர்கள் அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை எதிர்த்து




நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியபின் தமிழ்த் தேசிய இனத்தின் 'வீழ்ச்சியும் எழுச்சியும்' என்ற ஒரு நூலை எழுதினார். வீழ்ச்சி கண்ட தமிழினம் பின்னால் எழுகின்றதென்றால் அடங்கி வாழும் தமிழினம் ஆயுதம் தாங்கும் காலத்தையே எழுச்சி என்று குறிப்பிட்டார். அந்த எழுச்சியை இன்று தந்தவர்கள் எமது தேசியத் தலைவரும் போராளிகளும் மாவீரர்களுமே. சோல்பரி முதல் இந்தியத் தலைவர்கள் வரை தமிழருக்குத் துரோகம் செய்த பாவிகள் நாங்கள் எனத் தலையில் அடித்துக் கொள்ளவைத்தவர்கள் உங்கள் பிள்ளைகளான இந்த மாவீரர்கள்.

ஜே.வி.பி. இடைக்கால நிர்வாகப் பேச்சுக்களை அனுமதிக்கமாட்டோம் என்கிறது. சந்திரிகாவோ நிமிடத்திற்கு நிமிடம் ஏதேதோ சொல்லுகிறார். நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். கடந்த கால விட்டுக்கொடுப்புக்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதனால், ஏற்பட்ட சலிப்புத்தான் இன்றைய நிலை. எம்மிடம் எல்லா வல்லமையும் உண்டு என்பதை உலகம் அறியும். எமது பலத்தை, சக்தியை புரிய வைத்தவர்கள்தான் எங்கள் மாவீரர்கள்.

தமிழ்மக்களைக் கிள்ளுக்கீரையாகப் பார்த்த போது உயிர் ஆயுதமாகக் கரும்புலியாக மாறியவர்கள் எங்கள் மாவீரர்கள். எமது முன்னோர்கள் வாழ்ந்த மண்ணில் விட்டுச் சென்ற அடையாளங்களை வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்க எமது தேச விடிவிற்காக எத்தகைய விலைகளையும் கொடுக்கத்தயார் என்பதை உணர்த்திக் கொண்டிருப்பவர்கள் மாவீரர்கள்.

சிங்கள ஆட்சியாளர்கள் எதையும் கொடுக்க மாட்டோம் எனச் சொல்லலாம். இங்கே பறக்கும் எங்கள் தேசியக் கொடியை -நீதிமன்றத்தை - நிர்வாகக் கட்டமைப்புக்களை அவர்கள் எமக்குத் தந்தவர்களல்லர். உங்கள் பிள்ளைகளின் தியாகத்தால் எமது தலைவரின் உறுதியான கொள்கையினால் இந்த உச்சநிலையைக் கண்டவர்கள் நாங்கள் - என்று கூறினார்.

இராமச்சந்திரன் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

எமது இனத்தின் விடிவு நிச்சியமாகிவிட்டது. இதற்கு எங்கள் தேசியத் தலைவருக்கு உறுதுணையாக இருந்து தங்களை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிப்பதில் எமது சங்கம் பெருமைப்படுகிறது - என்றார்.

ஒன்றியப் பிரதிநிதி கே.பாஸ்ராஜ் பேசும்போது-

போரென்றால் போரென்று ஜே.ஆர். அன்று கூறினார். இன்று சமாதானம் என்கிறார்கள் இந்த இடைப்பட்ட காலத்தில் தங்களது உயிர்களை அர்ப்பணித்து இந்த நிலைக்குக் கொண்டுவரக் காரணமாக இருந்தவர்கள் மாவீரர்கள் - என்றார்.

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி மற்றும் பலர் பேசினார்கள்.

முன்னதாக மாவீரர்களின் பெற்றோர்கள் சத்திரச்சந்தியில் இருந்து மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். (ப-111)

## கௌரவமான தீர்வு ஏற்படும்வரை தமிழர்கள் விட்டுக்கொடுக்க முடியாது

கோப்பாய்,டிசெ.6

கௌரவமான தீர்வு எதுவும் ஏற்படாத வரையில் விட்டுக்கொடுப்பு எதையும் தமிழர் தரப்பில் செய்யமுடியாது என்று கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் இ.ஜனகேந்திரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

கலை, இலக்கிய, நாடக, விளையாட்டு விழாக்கள் மூலமே ஒரு சமூகத்தின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

யுத்த சூழல் காரணமாகக் கடந்த காலங்களில் இவ்வாறான வைபவங்கள் பெருமளவில் நடைபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுவிட்டன. இவ்வாறான நிகழ்வுகளைக் காண்பதன் மூலம் அல்லது பங்குபற்றுவதன் மூலம் சிறுவர்கள், இளைஞர்கள் தமது திறன்களை விருத்திசெய்வதுடன், விருந்தினர்களைக் காண்பதன் மூலம் தாமும் சமூகத்தில் அவ்வாறானதொரு நிலையை அடையவேண்டுமென்ற உணர்வைப் பெறுவார்கள்.

1987 வரை எமது குடாநாட்டைப் பொறுத்த வரையில் 9லட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தமது பாரம்பரியக் கலை, பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து வந்தனர்.



இவ்வாறு இந்நிலை நீடித்திருப்பின் இன்று எமது குடாநாட்டுப் பிரதேசத்தில் 14லட்சம் பேராவது வசித்து இருக்கவேண்டிய நேரத்தில் இன்று 6லட்சம் பேரே இருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது எமது சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். தற்போது கடந்த 2 வருடங்களாக நீடித்துவரும் சூழ்நிலையால் உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த மக்களின் இயல்புநிலை ஓரளவாவது ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தும் இன்று எமக்கு முன்புள்ள பெரிய பயம் யுத்தம் மீண்டும் வருமா என்பதே.

போராட்டம் எமக்கு ஒரு கௌரவமான தீர்வைப் பெற்றுத்தரும் வரையில் எமது தமிழர் தரப்பு விட்டுக்கொடுப்பெதனையும் செய்ய முடியாது - என்று கூறினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ப-72)

## மாவீரர் பெற்றோருக்கு

## தலைவணங்கும் கடப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு

தென்மராட்சி,டிசெ.6

இந்த மண் விடுதலை பெற்றாலும், எத்தனை வருடங்கள் சென்றாலும் மறக்க முடியாத இந்த மாவீரர்களைத் தந்த உங்கள் அனைவருக்கும் தலை வணங்கும் கடப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

தலைவரின் எண்ணப்படி செயற்பட்டு எமது இனத்தை இழந்த நிலையில் தலைநிமிர்ந்து நிற்கவைத்தவர்கள் உங்கள் பிள்ளைகளே.

காலத்தால் அழியாத காவியமாகிவிட்ட உங்கள் பிள்ளைகளின் கல்லறைகள் எமது விடிவுக்குத் துணைநிற்கும் மாபெரும் தூண்கள்.

- இவ்வாறு தென்மராட்சி பிரதேசப் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் கூறினார்.

சாவகச்சேரிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ம.அ.மரியபேணாட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மேலும் அவர் உரையாற்றுகையில் -

எமது எதிர்காலச் சந்ததியினர் சுதந்திரக் காற்றைச் சுவீகரிக்கும்போது, அவர்கள் சொரிகின்ற பூக்கள் உங்கள் பிள்ளைகளின் கல்லறைகளில் விழுகின்றபொழுது, நீங்கள் உங்கள் பிள்ளைகளை இழந்து துயருறும் அந்தத் துன்பத்திற்கு ஓர் ஆன்ம மருந்தாக அமையும். எமது தேசத்தின் தலைவரின் வழியில் உங்கள் பிள்ளைகள் நடந்ததையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

தமிழீழம் பிறக்கும் நாளில் உங்கள் பிள்ளைகள் மட்டுமல்ல, பிள்ளைகளைத் தந்த பெற்றோர்களாகிய நீங்களும் பெருமையுறுவீர்கள்; மாண்பு பெறுவீர்கள் -என்றார்.

தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் த.அப்புத்துரை, சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (ப-117)

## ஆலயங்களை வளர்ப்பது போன்று பாடசாலைகளையும் வளர்க்கவேண்டும்

### இணுவில் இந்து கலைவிழாவில் ஆறு.திருமுருகன்

வலி.தெற்கு,டிசெ.6

"ஆலயங்களை வளர்த்தெடுப்பது போல கல்விச்சாலைகளையும் வளர்த்தெடுப்பது மக்களின் பிரதான கடமையாகும்"

இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கலை விழா நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் எஸ்.சச்சிதானந்தம் தலைமையில் கலைவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தமது உரையில் கூறியதாவது:

150 வருடம் பழைமை வாய்ந்த இணுவில் இந்துக்கல்லூரி எத்தனையோ அறிஞர்களையும் கலைஞர்களையும் உருவாக்கி உள்ளது. நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவிய காலத்திலே அவருடைய வேண்டுகோள்படி இணுவிலில் உருவாக்கப்பட்டது இக்கல்லூரி.

இன்றைய பாடசாலை மாணவர்களின் தொகைக்கேற்ப பாடசாலையின் கட்டட அமைப்பு பற்றாக்குறையாக உள்ளது.

இணுவிலில் ஆலயங்கள் பேரெழுச்சி கண்டுள்ளன. ஆலயங்கள் அனைத்தும் ராஜா கோபுரங்கள், சிறப்புத் தேர்கள், கல்யாணமண்டபங்கள் என்பனவற்றோடு காட்சி அளிக்கின்றபோது, எல்லோருக்கும் எழுத்தறிவூட்டும் இந்துக் கல்லூரியின் கட்டட அமைப்புகள் மட்டும் சீராக இல்லாதிருப்பது கவலைக்குரியது.



ஆலயங்களுக்கு நாம் செய்யும் தொண்டுகள் போல் கல்விச்சாலைகளுக்கும் தொண்டாற்ற வேண்டும். 70 ஆண்டுகளுக்கு முன் இங்கு கல்விகற்ற எனது தாயார் வாரத்தில் ஒருநாள் தாம் சாணகம் கொண்டு வந்து மெழுகிப் படித்ததாக இன்றும் கூறுவார்.

புகழத்தக்க இக்கிராமத்தின் கல்விமான் முத்தமிழ் வித்தகர் அம்பிகைபாகன் இப்பாடசாலையைக் கட்டி வளர்த்தார். அவரின்பின் பல பெரியார்களால் பேணப்பட்டு உன்னத நிலையில் உள்ள இக்கல்லூரியின் இன்றைய தேவைகளை ஊர்மக்களும் பழையமாணவர்களும் இணைந்து நிறைவுசெய்ய வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்தின் வளர்ச்சியும் அங்குள்ள கல்விச்சாலைகளின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. முன்னர் பிடிஅரிசி எடுத்தும், மண்,கல் சுமந்தும் பாடசாலைகளைக் கட்டினார்கள். ஆனால், இன்று பாடசாலைகள் மீது அக்கறை செலுத்தும் சமுதாயம் மிகக் குறைவாகவே உள்ளது என்று கூறினார். (ப-152)

## தேசியத்தில் பற்றுள்ளவர்களாக மாணவர்கள் வளரவேண்டும்

வடமராட்சி கிழக்கு,டிசெ.6

"மாணவர்களைத் தேசியத்தில் பற்று உள்ளவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடம் உண்டு."

வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பா.ஆதித்தன் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சிக் கல்வி வலயத்தில் இவ்வாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 177 மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் பருத்தித்துறை ஞானியார் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில், ஞானியார் கல்விக் கழகத் தலைவர் வே.நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பா.ஆதித்தன் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பார்கள். தரம் ஐந்து புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் விளைச்சலுக்குரிய பயிர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடம் உண்டு. இம்மாணவர்கள் அனைவரும் தேசியத்தில் பற்று உள்ளவர்களாகவும் தேசத்தின் நிர்மாணிகளாகவும் நிர்வாகிகளாகவும் தலைவர்களாகவும் உருவாக்கப்படவேண்டும். அப்போதுதான் இவர்களின் பயனைத் தேசம் அடையமுடியும்.

மனிதன் தன்னை அறிந்துகொள்வதற்கும், தேசியத்தை அறிந்துகொள்வதற்கும், உலகத்தை அறிந்துகொள்வதற்கும் கல்வி அவசியமானதாகும். இதுவே எமது தேசியத் தலைவரின் கல்வி சம்பந்தமான சிந்தனையாகும்.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதிவேலை காரணமாக எமது மண்ணில் கலாசார சீர்கேடுகள் விதைக்கப்பட்டுள்ளன. ஆபாசச் சினிமாப் படங்கள் மூலம் எமது மாணவர்களின் கல்வியும், கலாசாரமும் சிதைக்கப்பட்டு வருகின்றன. சினிமாப் படங்களின் தாக்கம் மாணவர்களின் கல்வியையும், கலாசாரத்தையும் சீரழிப்பதற்குப் பெற்றோர்களும் காரணமாக உள்ளார்கள். சில பெற்றோர்களுக்கு சினிமாக்களில் உள்ள மோகம் காரணமாகப் பிள்ளைகளும் அவ்வழியைப் பின்பற்றுகின்றார்கள். பிள்ளைகளுக்கு நல்லவற்றை வழிகாட்டுவதன் மூலமே அவர்களின் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் பெற்றோர்கள் உதவமுடியும். பெற்றோர்களின் சரியான வழிகாட்டல் இன்மையால் பாடசாலை நிர்வாகங்களே மாணவர்களால் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுகின்றன. மாணவர்களைத் தேசியத்தில் பற்று உள்ளவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடம் உண்டு -என்றார்.

இவ்வைபவத்தில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ப-182)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய மணவறை, நல்ல நிலையிலுள்ள பாவித்த மணவறை, 40 அடி அலங்காரப் பந்தல் ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: S.தயா, இணுவில் சந்தி, இணுவில். (39300)

## வீடு வளவு விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் முருகமூர்த்தி கோயிலடியில் இருந்து 200 யார் தூரத்தில் கச்சாய் வீதியை முகப்பாகக் கொண்ட 30 பரப்புக்காணியும், கல் வீடு வளவும் விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை). தொடர்பு: த.வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி. T.P.: 222 7246. (39298)

## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

Original Pure Bred Doberman Pincher நாய்க்குட்டிகளும் ஒரு Dachund நாய்க்குட்டியும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தை, நல்லூர். (39199)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 06.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பரு. நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-39495)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொத்தர் (Green Card) விண்ணப்பிக்க முடிவு திகதி நெருங்கிவிட்டது. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப் பெயர்கள், பிறந்த நாள்கள், விலாசத்தையும் எழுதி ரூபா 300/- மணியோடருடன் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2 - F23, BLOEMENDHAL FLATS, KOTAHENA. T.P.: 077 3081764.

(C/39500)

## தவறிவிட்டது

சுதுமலைச் சந்திக்கும் கூளாவடிச் சந்திக்கும் இடையில் கறுத்த உடுப்பு பாக் (Bag) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சுப்பிரமணியம் - ஈஸ்வரி, கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. T.P.: 077 6562186. (39310)

# MATHS CENTRE

**M.M.V. Road - Nelliady.**

**புதிய வகுப்புகள்**

✦ Gr.4 முதல் Gr. 11 வரை

**ஆரம்பம்: 10.12.2004**
**வெள்ளி 3.30 p.m.**

✦ பழைய மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளுடன் வரவும்.

✦ புதிய மாணவர்கள் பெற்றோருடன் அனுமதிகளை 06.12.2004 திங்கட்கிழமை மாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளவும். (சி-39480)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 02 * 07 * 1941

உதிர்வு 06 * 11 * 2004

## திருமதி இராமலிங்கம் முத்தம்மா

பாசமாய் எனைப் பெற்று
ஆசையாய் அள்ளி எடுத்து
வாசமாய் என்வன் பரவி நின்று
இன்று தூரதேசமாய் போன என் தாயே!
நீங்கள் தென்றலாய் எனை வருடவில்லை
குட்டிப் புயலாய் என்னை
குதூகலிக்க வைத்தீர்களே!
முத்தத்துள் எனை மூழ்கடித்து - இன்று
கண்ணீர்க் கடலில் தவிக்க விட்டு
விட்டுப் போனதேனம்மா?
கால் நூற்றாண்டை என்னோடு கழித்துவிட்டு
காலன் மேல் பாசம் கொண்டதேன் தாயே?

புதுவளவு,
இடைக்காடு,
அச்சுவேலி. (39301) (24-14-45-26)

ஏக்கமுடன்
**- ஆசைமகள்.**

## திருட்டுப்போன கவசத்துக்குப் பதில் புதிய கவசம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலில் கடந்த மூன்று மாதங்களுக்குமுன் திருட்டுப்போன பிள்ளையாரின் கவசத்திற்குப் பதிலாகப் புதிய கவசம் ஒன்று செய்யப்பட்டு பொதுமக்களால் உபயமாக வழங்கப்பட்டுள்ளது.

ஐம்பொன்னினால், சுமார் 75ஆயிரம் ரூபா செலவில் செய்யப்பட்ட இக்கவசத்திற்கான செலவுத்தொகை அப்பகுதி மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-15)

## மோட்டார் சைக்கிள் திருட்டு!

வலி.கிழக்கு,டிசெ.6

கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியில் கடை ஒன்றுக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளதாகக் கோப்பாய்ப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-180)

## திருமண சேவை

**மாஸ்ரர் மரீஜ் சேவிஸ்** 128/4, பலாலி வீதி, திருநெல்வேலி

கிழமை நாள்களில் காலை 9.00 - 12.00 மணி வரை நேரில் தொடர்புகொள்ளலாம். எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகக்குறிப்புகள் உண்டு.

உங்கள் ஜாதகப் பிரதியுடனும் போட்டோவுடனும் எமது அலுவலகத்திற்கு வந்து மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம.

(39303) **- மாஸ்ரர்.**

## சமஸ்கிருத நூல்கள்

**நியாய லகு வியாகரணம்**
(அடிப்படை சமஸ்கிருத இலக்கண நூல்)
**நியாய லகு வியாகரணப் பயிற்சி நூல்**
**சிவமகோத்ஸவபத்ததி**
**கிடைக்குமிடங்கள்:**

| | |
|---|---|
| 33.கடையிற்சுவாமி வீதி. நீராவியடி. யாழ்ப்பாணம். (39299)(39-14-45-26) | இ.இராமசாமி ஐயர். உடுவில் வீதி. மானிப்பாய். |

## கீன் கல்லூரி

**128/4, பலாலி வீதி, திருநெல்வேலி**

**புதிய கல்வியாண்டு - 2005**

ஆரம்பம்: 12-12-2004 காலை 7.00 மணி
தரம் 3 - O/L வரை சகல பிரிவுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன!

விசேட திறமையுள்ள ஆசிரியர்களினால் சகல பாடங்களும் போதிக்கப்படும். ஒவ்வொரு பாடத்துக்கும் மாதாந்தப் பரீட்சை நடத்தப்படும.

★ எமது கல்வி நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் தேவை.

*09-12-2004 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்.*

(A/L) *சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது.*

(39302) - நிர்வாகி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரிதிரேசா செல்வம் (ராசா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா செல்வம் (ராசா) நேற்றுமுன்தினம் (04.12.2004) சனிக்கிழமை கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி லில்லி கார்த்திகேசு அவர்களின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி யோசேப் செல்வம் அவர்களின் அன்பு மனைவியும் எமில், எமில்டா (ஜேர்மனி), எமில்ற்ரன் (கனடா), எரிக், ஏணெஸ்ற ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமங்கலா, ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஸ்கந்தா, ஜெருஷா, ஜெரூன், அனோயெயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற டெய்சி, லீலா, ஜெயராஜசிங்கம் (I.C.C.,கொழும்பு), வெலிசியா, குலநாயகி சின்றெல்லா (P.H.M. M.O.H. கந்தோர், மானிப்பாய்), அரசகுலசிங்கம் (U.N.H.C.R. வவுனியா), ஜெசீலியா, போசியா (போதனா வைத்தியசாலை, யாழ.), பற்றீஷியா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (06.12.2004) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆர்க் லேன்,*
*உடுவில், சுன்னாகம்.* (39306)(22-14-45-26)

தகவல்:
பிள்ளைகள்.

## தம்பிப்பிள்ளை தவராஜா

*(முன்னாள் ஊழியர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)*



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தவராஜா 01-12-2004 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும் அழகராஜா, புஸ்பராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06-12-2004) திங்கட்கிழமை மாலை 4மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*8, சின்னாலங்கண்டு லேன்,*
*அரியாலை.* (39305)(26-14-45)

தகவல்:
த.அழகராஜா *(தம்பி)*

## கந்தையா விசுவலிங்கம்

(இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபைப் பொருளாளரும், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விவசாயப் பகுதி முன்னாள் முகாமையாளரும்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விசுவலிங்கம் நேற்று (05-12-2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கண்மணி (நயினாதீவு) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயரட்ணசிங்கம் (வலி.தென மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்), காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயசோதி, (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெயானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விமலாதேவி, மதனரூபி, மரியா (சுவிஸ்), சிவகாமி (இலங்கை மின்சார சபை, வவுனியா), பிரேமாதேவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் குமரேசு, காலஞ்சென்ற கைலாயபிள்ளை மற்றும் குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து, பார்வதிப்பிள்ளை, இலட்சுமி, வள்ளிப்பிள்ளை, மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெனித்தா, ஜெயந்தா, ஜெயந்தன், ஜெசிந்தா, ஜெயநந்தா, ஜெயவிந்தா, ஜெயபானு, ஜெயமதனா, ஜெயமலர், மரிஸ்ரெல்லா (சுவிஸ்), ஜெனீவா (சுவிஸ்), ஜெயோல் (சுவிஸ்), ஜெயபிரியங்கா, ஜெயபைரவி, ஜெயவிகாஸ், ஜெயோன் (கனடா), அபிராமி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"காந்த வாசம்',*
*செட்டிவளவு லேன்,*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

தகவல்:
வி.ஜயசோதி (மகன்)
(37307)(26-14-45)

## உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்க...

**"பட்டப்படிப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"**

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

*வடமராட்சியில்*
காலம்: 07.12.2004
இடம் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
நேரம்: பிற்பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை

*யாழ்ப்பாணத்தில்*
காலம்: 09.12.2004
இடம்: நாவலர் மண்டபம்
நேரம்: பிற்பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை




**Dr.M.G.R.**
**Deemed University**

OFFSHORE CAMPUS INFORMATION AND ADMISSION CENTRE

No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840.

(C/39455) உதயன் Graphics

# கண்ணீர்க் காணிக்கைகள்

03.12.2004 அன்று திடீர் மரணமான

செல்வி

## மகாலிங்கம் யதுசினி



அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
கண்ணீர்க் காணிக்கையைச்
சமர்ப்பித்து அன்னாரின் ஆன்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.6, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
T.P.021 2226092. (39295)(39-14-45-26)

**அக்காமார், அண்ணாமார்,**
**மச்சான்மார், மச்சாள்மார்,**
**மற்றும் உறவினர்கள்.**

# புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனை:

# எதிர்காலத் தனிநாடு ஒன்றுக்கான முதன்நிலை என்பது முழுத் தவறு

'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையே பேச்சுக்கு அடிப்படையாக வேண்டும்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்த உரைத்தொடரின இரண்டாவது பகுதி இது.

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றியிருந்தார்.

இ.த.அ. சபைக்கு எதிராகப் பரவலாக வைக்கப்படுகின்ற மற்றுமொரு குற்றச்சாட்டு என்னவெனில், இ.த.அ. சபையானது ஆராயப்படுவதற்குப் புலிகள் உடன்பட்ட சமஷ்டி யோசனைக்கும் அப்பால் செல்கின்றது என்பதாகும். அதாவது, தற்போதைய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கிறிஸ்ரீனாறொக்கா ஆகியோர் கூற்றுப்படி இ.த.அ.ச. ஆனது உண்மையில் 'எதிர்காலத் தனி நாடொன்றிற்கான முதனிலைப் படிவம்' (Blue print) என்பதாகும். இதையும் நான் நிராகரிக்கின்றேன்.

முன்னர் நான் தெளிவாகக் கூறியது போல் இ.த.அ. சபை என்பது இடைக்கால நிர்வாகத்திற்கான ஒரு யோசனையேயன்றி இறுதித் தீர்வுக்கான யோசனையல்ல. மையப்பிரச்சினைகளுக்குக் கவனஞ்செலுத்துகையில் ஏற்படுகின்ற இறுதித் தீர்வு தொடர்பானதாக மட்டுமே சமஷ்டித் தீர்வொன்றைப் பரிசீலனை செய்வதற்கான விருபபம் அமைந்திருந்தது. மனதிலிருத்த வேண்டிய முதல் விடயம் இதுதான்.

இரண்டாவது விடயம் யாதெனில், "இ.த.அ. சபை என்பது ஆலோசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்திற்கானதாக இருந்தாலும், அத்தகைய நிர்வாகம் சமஷ்டி யோசனைக்கு அபபாற்பட்டதாகச் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது" என்ற கருத்து முன்வைக்கப்பட்டாலும் கூட, இ.த.அ.ச. உண்மையில் சமஷ்டி யோசனைக்கு அப்பால் செல்லவில்லை என்பதே எனது கருத்து. சமஷ்டி யோசனை இரண்டு விடயங்களை உள்ளடக்கியது என்பதை நாம் யாவரும் அறிவோம். முதலாவது, தம்மைத் தாமே ஆளுதல் அல்லது பிரதேசங்களுக்கான தன்னாதிக்கம்; இரண்டாவது, மத்தியிலுள்ள அதிகாரங்களைப் பிரதேசங்கள் பகிர்ந்துகொள்ளல். எனது வாதம் என்னவெனில், சமஷ்டி யோசனையின் தன்னாதிக்கம் அல்லது சுய ஆட்சி எனும் அம்சத்தை மட்டும் கொண்டிருப்பதாகவே இ.த.அ. சபை பொருள்கொள்ள முடியும் என்பதுடன், ஆட்சிப் பகிர்வு அல்லது அதிகாரப்பகிர்வு அம்சம் அதில் இல்லை என்பதாகும். நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப புலிகளால் எடுக்கப்பட்ட சரியான அணுகுமுறை இதுவாகும் என்பது எனது கருத்து.

இதைப் பின்வருமாறு விளக்குகிறேன்:

இன்று மிகவும் இறுக்கமான எமது நோக்கதத்திற்கு நடைமுறையில் சாத்தியப்படாத ஒற்றையாட்சி அரசமைப்புக் குறித்துச் சிந்திக்கின்றோம். உண்மையான வார்த்தைகளில் சொல்வதெனின், இம்மியளவேனும் அர்த்தங்கொள்ளத் தக்க வகையிலான அதிகாரப் பகிர்வுக்கே இடமளிக்காத இந்த அரசமைப்பில் சுயாட்சிக்கோ அல்லது தன்னாதிக்கத்திற்கோ இடம் கிடையாது. மறுபுறத்தே, இ.த.அ. சபையானது வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றோடு தொடர்புடைய சகல விடயங்களிலும் தன்னாட்சி கொண்டிருப்பதற்கான வழியை ஏற்படுத்துவதற்கான ஒரு ஆலோசனையாகும். ஆகவே, இ.த.அ. சபையானது சமஷ்டி யோசனையின் அதிகாரப் பகிர்வு அம்சத்தையும் கொண்டிருக்க வேண்டுமாயின், முதலில் அது தனது நோக்கத்திற்கு அப்பால் செல்வதாகிவிடும். இரண்டாவது, தற்போதைய ஒற்றையாட்சி அரசமைப்புடன் உருப்படியான ஏதும் இணைப்பை ஏற்படுத்தும் அக்கணத்திலேயே அது முற்றிலும் பயனற்றதாகிவிடும். மேற்சொன்ன நோக்கங்கள் தொடர்பில், எந்த அர்த்தமுடைய தரத்திலுமான தன்னாட்சியை நடைமுறைப்படுத்த முடியாது போவதால் இ.த.அ. சபையின் முழு நோக்கமும் தோற்கடிக்கப்பட்டுவிடும்.

இ.த.அ. சபை என்பது. தனிநாடொன்றிற்கான "முதனிலைப்படிவம்" (Blue print) என்ற மற்றைய குற்றச்சாட்டும் மீண்டுமொரு தடவை, ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். ஏலவே நான் குறிப்பிட்ட காரணங்களின் நிமித்தம் இ.த.அ.சபை ஆனது தற்போதைய அரசியலமைப்புடனான இணைப்பில் திட்டமிட்டவாறே மிகவும் பலவீனமாயிருப்பதால், இ.த.அ.சபையினுள் இலங்கை அரசின் பிரதிநிதிகளையும் ஏற்றுக் கொள்வதன் மூலம் புலிகள் தமது நேர்மையை நிரூபித்துள்ளனர் என்ற கருத்தை நான் முன்வைக்கின்றேன். எல்லோரும் மிகவும் எளிதாகப் புறக்கணிப்பதுபோல் தோன்றும் இவ்விடயம் மிகவும் முக்கியமானது. இ.த.அ. சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரிவினர் பற்றி விவரிக்கையில், வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகளைப் பற்றிக் கூறுவதுபோல், "வடக்கு - கிழக்கிலுள்ள சிங்களப் பிரதிநிதிகள்" என்று புலிகள் இலகுவாகக் குறிப்பிட்டிருக்கலாம். மாறாக, இ.த.அ. சபை ஆனது, இலங்கை அரசின் பிரதிநிதிகள் பற்றித் திட்டமிட்டவாறு கூறுகிறது. இ.த.அ. சபையானது எதிர்காலத் தனி நாடொன்றுக்கான "முதனிலைப் படிவமாக" விளங்கவேண்டுமென உண்மையில் புலிகள் விரும்பியிருந்தால், அரசுப் பிரதிநிதிகளை அதில் உள்ளடக்கியிருக்கமாட்டார்கள் என்பது எனது ஆணித்தரமான கருத்து.

ஆகவே, கடந்த பொதுத் தேர்தலின்போது புலிகளால் கோரப்பட்டுத் தமிழ்மக்களால் அதற்கு ஆணை வழங்கப்பட்டதற்கிணங்க, இ.த.அ. சபையின் அடிப்படையில் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அரசிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அழுத்தத்தைக் கொடுக்குமாறு இம்மாநாட்டின் பங்கேற்பாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

இ.த.அ. சபையின் உட்கிடைகள் தொடர்பில் தெளிவாக்கப்படவேண்டிய ஏதும் ஐயங்கள் இருப்பின், முறைசார்ந்த பேச்சுகளில் நேருக்கு நேர் ஈடுபடும்போது மட்டுமே இவ் ஐயங்களை முறையாகவும் முழுமையாகவும் தீர்த்துக் கொள்ளமுடியும். இ.த.அ. சபையானது முற்றிலும சட்டபூர்வமான, நியாயபூர்வமான ஆலோசனையாக இருப்பதை நான் உறுதியாக நம்பும் அதேவேளை, இவ்வாலோசனை பற்றிப் பேசுவதற்குக்கூட அரசு தயாராயில்லையெனில், இது விடயத்தில் எந்த முன்னேற்றமும் காண முடியாது என்றும் கூறிவைக்கின்றேன். ஆறப்போட்டுவிட முடியாதபடி இ.த.அ. சபையானது மிக முக்கியமான மிகக் காத்திரமான ஒரு விடயமாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நிலைமை அப்படி உள்ளதுபோல்தான் தோன்றுகின்றது.

(வளரும்)

## போக்குவரத்து விதிகளை மாணவர்கள் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில்லை

### கவலை தெரிவிக்கிறார் பொலீஸ் அதிகாரி

வலி.கிழக்கு,டிசெ.6

மாணவர்கள் மத்தியில் வீதிப்போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தியும் மாணவர்கள் அதைக் கடைப்பிடிப்பதில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் அச்சுவேலி பொலீஸ் நிலையப் பெறுப்பதிகாரி சன்ஜீவ பண்டார.

அவர் மேலும் கூறுகையில் -

சமாதானம் நிலவும் காலத்தில் யாழ். குடாநாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை, குறிப்பாக மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால், வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளன. வீதி விபத்துக்களுக்கு சகல தரப்பினருமே காரணம். வாகனங்களின் வேகம் என்று ஒரு தரப்பை மட்டும் குற்றஞ்சாட்டமுடியாது.

இன்று படித்த மாணவர்கள், மாணவிகளே சைக்கிளில் சமாந்தரமாகச் செல்கின்றார்கள்.

வாகனச் சாரதிகள் 'ஹோர்ன்' அடித்தாலும் விலகாது, சைக்கிளில் சமாந்தரமாகச் செல்கிறார்கள். இப்படியான நிலையில் வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் சகல தரப்பினரும், தாம் சரியான போக்குவரத்து விதிகளின்படி நடக்கின்றோமா என்பதனைப் புரிந்து செயற்பட்டால் விபத்துக்களைத் தடுக்கலாம். மாணவர்களுக்கு மாதாமாதம் வீதி விபத்துக்கள் தொடர்பாகக் கருத்துரைகளைப் பாடசாலைகள் தோறும் நடத்துகின்றோம். அதைக் கேட்கின்றார்கள். ஆனால், கடைப்பிடிப்பதில்லை.

எனவே, அனைத்து மக்களும் உயிரின் விலையை நன்கு உணர்ந்து வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் - என்றார்.

(ப-180)

## பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு செவ்வாய் முதல் மின்சாரம் கிடைத்தது

வலி.தென்மேற்கு,டிசெ.6

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்குக் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் மின் இணைப்பு வேலைகளைப் பூர்த்திசெய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்துதருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் இதற்கென 40 ஆயிரம் ரூபா அவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் சித்தன்கேணி மின் அத்தியட்சகர் அலுவலகத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று மின் விநியோகத்தை வழங்கினர்.

(எ-135)


# உதயன் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

கொழும்பகம் அரியாலையில் தீவிர சல்லடை
2 பேர் மரணம் ; 2 பேர் காயம்
21.12.1985

வடக்கு, கிழக்கு இணைந்த
சுயாட்சி பெறுவதில் கூட்டணி பிடிவாதம்
விட்டுக் கொடுக்கத் தயாரில்லை
21.12.1985

22.12.1985
குடாநாட்டில் பரந்த அளவில் நேற்று விமானத் தாக்குதல்
எப்போது, எங்கு சூடு விழும் என அஞ்சி கிராமம் தோறும் மக்கள் பதற்றம்
சதுமலேச் "சமர்" 4 மணி நேரம் நீடித்தது
துப்பாக்கி, குண்டு, லோஞ்சர் வேட்டுச் சத்தங்கள் முழங்கின

21.12.1985
மட்டுநகர் சந்தையில் துப்பாக்கிச்சூடு
$2\frac{1}{2}$ மணிநேரம் பதற்றம்

மட்டக்களப்பு நேற்று முற்றுகை
500 பேர் கைதாகினர்
முகமூடி நபர்கள் முன் ஆஜர் செய்யப்பட்ட பின் 40 பேர் மட்டும் தடுத்து வைப்பு
—மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்—
22.12.1985

இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்திய பாதுகாப்புடன் சம்பந்தம்
நியூயோர்க் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி திவாரி உரை
22.12.1985

22.12.1985
"சித்திரவதை செய்வது கிரிமினல் குற்றம்"
இலங்கை அரசுக்கு 8 அம்சக் கோரிக்கை
சர்வதேச மன்னிப்புச் சபை அனுப்பியது

ஆலய மூலஸ்தானம் வரை பாதணியுடன் செல்லுகிறார்கள் ஆயுதப்படையினர்
இளைஞர் மன்ற நிர்வாக சபை ஜனாதிபதிக்கு முறையிடும்
22.12.1985







கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையில் 'அருணலு' சேமிப்புக் கணக்கு வைத்துள்ள மாணவர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வங்கியில் நடைபெற்றது. கௌரவிப்புப் பெற்ற மாணவர்கள் பரிசில்களுடன் அமர்ந்திருப்பதையும் - வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: பொ.இராஜேஸ்வரன். வலிகிழக்குச் செய்தியாளர்)*

# கௌரவிப்புப் பெற்ற மாணவர்கள்

வலி.கிழக்கு,டிசெ.6

இவ்வாண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற யாழ்.கொமர்ஷல் வங்கியில் அருணலு சேமிப்புக் கணக்கு வைத்துள்ள மாணவர்கள் நேற்று வங்கியினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்புப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஆர்.கிருஷிகா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ரி.குருபரன் (ஆனைப்பந்தி மெ.மி.த.க வித்தியாலயம்), எஸ்.கவிதா (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ரி.துஜிவா (அல்லாரை தமிழ் வித்தியாலயம்), எஸ்.ராஜ்குமார் (வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்), ரி.கைலைநீதன் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஓ.கோபிகிருஷ்ணா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.சிந்துஜா (அரியாலை சரஸ்வதி மகாவித்தியாலயம்), என்.லவனோஜன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஜி.துவாரகன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.அனுஷன் (ஏழாலை [illegible] சன்மார்க்க வித்தியாலயம்), கே.கிரு[illegible] (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), கெநிலக்ஷன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), எ.வித்தாகரன் (திருநெல்வேலி இ.த.க.பாடசாலை) எஸ்.அபிலஷா (ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை). (எ-180)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தியாகராஜா

**(பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்க கணக்குப் பதிவாளர்)**

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா தியாகராஜா 03.12.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா (மனேச்சர் செல்லர்) - நாகம்மாவின் மகனும் தாமோதரம்பிள்ளை (முன்னாள் கொள்வனவு முகாமையாளா, சங்கானை ப.நோ.கூ.சங்கம்) - சிவஞானத்தின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரதீபா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), பிரணவன் (யாழ்.இந்துக்கல்லூரி), குகப்பிரியா (மாதகல் சென்.ஜோசப் ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகசுந்தரம் (முன்னாள் பொது முகாமையாளர், செட்டிக்குளம் ப.நோ.கூ.ச.), செல்வம், செந்தில்நாதன் (பிரான்ஸ்), புவனேஸ்வரி **(Canada)**, சந்திரசேகரன் **(Canada)** ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இந்திராணி (இளைப்பாறிய ஆசிரியர்), அப்புத்துரை (முன்னாள் வடபிராந்திய முகாமையாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), வதனி (France), தவேந்திரன், (Canada), கலா (Canada), பரமேஸ்வரி, பாலகிருஸ்ணன் (London), பத்மநாதன் (London), ஈஸ்வரி (London), கதிர்காமநாதன் (Canada) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2004) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் போதி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
நாகேஸ்வரி (மனைவி),
பிரணவன் (மகன்).

*கனால் வீதி,*
*யாதம்பை,*
*மாதகல்.*
(39323)(43-13-16)

### இரத்தினசிங்கம் இராசலிங்கம்

முல்லைத்தீவு, அம்பலவனபொக்கணையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இராசலிங்கம் நேற்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவிலைச் சேர்ந்த அருட்செல்வியின் அன்புக் கணவரும் அமுல்ஜன், துவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2004) திங்கட கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி தயாபரன் என்பவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*சந்திரபுரம்,*
*மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.*
(39325)(43-13-16)

தகவல்:
க.தயாபரன்

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ முன்பள்ளி நடத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருச்சபைக் குரு அருட்திரு. வி.பத்மதயாளன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி பதிவாளர் அருட்திரு ரி.தேவதாசன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராசா கலந்து கொள்வார். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(ஜ-135)

### தவறிவிட்டது

இருபாலையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் புஷ்பராஜ் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் (A007317237) கடந்த 27.11.2004 சனிக்கிழமை கல்வியங்காடு, இராசவீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.

T.P.:0777 571915

கே.கே.போன் சொப்,
இல.1, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
(39320)

## மரண அறிவித்தல்

திருமதி

### சிவபாக்கியம் இராமநாதன்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் இராமநாதன் அவர்கள் 04.12.2004 சனிக்கிழமை காலமானார்.

நேற்றைய உதயனில் 15 ஆம் பக்கத்தில் வெளியான அன்னாரின் மரண அறிவித்தலில் பாலசுப்பிரமணியம் என்பவர் (இணைப்பாளர் வ.பி.போ.ச.) என பிரசுரமாகியிருந்தது. அதனை "வடபிராந்திய இணைப்பாளர், தேசிய தொழிற பயிற்சி அதிகாரசபை" எனத் திருத்தி வாசிக்கவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(39318)

## ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 05 - 1926 | 20 - 11 - 2004 |

### திருமதி அன்னலட்சுமி மாணிக்கம்

(செல்வநாயகம்)

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் 08.12.2004 புதன்கிழமை காலை கீரிமலையிலும், வீட்டுக் கிரியைகள் 10.12.2004 வெள்ளிக்கிழமை இல்லத்திலும் நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்விடம்:
கோயில் குடியிருப்பு, 2ம் ஒழுங்கை,
கைலாயபிள்ளை வீதி, சாவகச்சேரி.
தொ.பே.: 0777 852077
- 0777 6171545

மகன் : மா.குலேந்திரன்,
மருமகன் : க.உமாமகேஸ்வரன்.
(39317) (43-18-45-24)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அன்னை மடியில் 26 – 04 – 1941

ஆண்டவன் அடியில் 06 – 11 – 2004

திருமதி

### இராஜேஸ்வரி பத்மநாதன்

*ஆறாத் துயரத்தில் எம்மை ஆழ்த்திவிட்டு*
*மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்திற்கு*
*எமது கண்ணீர் அஞ்சலிகளைக்*
*காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.*

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவினால் நீங்காத சோகத்தில் மூழ்கி இருக்கும் எங்கள் குடும்பத்திற்கு ஆறுதல் கூறியும் அனுதாபம் தெரிவித்தும் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (06-12-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் யாபேரையும் அழைக்கின்றோம்.

'சிவபதி',
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
(39209)(26-13-16-43)

– குடும்பத்தினர்.

# கல்வயல் விபத்துச் சம்பவம்: லொறிச் சாரதிக்கு மறியல்

தென்மராட்சி,டிசெ.6

சாவகச்சேரி, மட்டுவில் - கல்வயல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைககிள் விபததில் சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

சம்பவ இடத்தை நேற்றுக் காலை சென்று பார்வையிட்ட நீதிவான், சம்பவத்தில் உயிரிழந்த வி.றொபின்சன் என்ற இளைஞனின் சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய லொறியும், மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

லொறிச் சாரதியான செல்லையா இந்திரன் என்பவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் வெதகே தலைமையிலான குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

(ஐ-3-31-117)

## பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு!

வலி.கிழக்கு,டிசெ.6

இரவு படுக்கைக்குச் சென்ற பல்கலைக்கழக மாணவன் மறுநாள் காலை உயிரிழந்து காணப்பட்டார். இவர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

கரணவாய், நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த இளையதம்பி கர்ணா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பட இரண்டாம் வருட இந்து மெய்யியல் சிறப்புப் பிரிவு மாணவராவார். (ஐ-180)

## களுத்துறை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.6

களுத்துறை பாலத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் மோதியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். கொல்லப்பட்ட இளைஞர் கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்தவர் எனப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)


## திருவருகைக் கால ஆயத்த இறை தியான வழிபாடு

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள



அருட்திரு. C.சேவியர்
சகோ. அ.இருதயசாமி
சகோ. ஞானம்
ஆகியோர் நடத்துகின்றார்கள்.

இடம்: புனித யுவானியார் ஆலயம், சுண்டிக்குளி.



காலம்: இன்று (06.12.2004)
மாலை 5.30 முதல் 7.30 வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இன்று காலை 9.30 - 11.30 வரை பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான இல்லத்தில் குணமாக்கல் வழிபாடும் நடைபெறும்.

- இறைதியான குழுவினர்.
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(39331)(32-13-16)

## மீண்டும் ஐ.தே.கவுக்கு வருகின்றார் கூரே

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிசேன கூரே மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பூர்வாங்க சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன எனவும் கட்சியின் தலைமை அவரைத் திரும்பச் சேர்த்துக்கொள்வதை சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் ஐ.தே.கட்சியில் முக்கிய நபராகச் செயற்பட்டுவந்த சிறிசேன கூரே பின்னர் ஐ.தே.கவில் இருந்து விலகி புதிய கட்சி ஒன்றைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு

எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின். தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமயக் குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஆசி வழங்கவுள்ளனர். (10)

## ரயில் கட்டணங்கள் விரைவில் உயரும்!

ரயில் கட்டணங்கள் அதிகரிப்பது தொடர்பான சிபாரிசு விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வு காரணமாக ரயில் சேவையை நடத்தப் பெரும்செலவு ஏற்பட்டுள்ளது. மானிய அடிப்படையில் நடத்தப்பட்டுவரும் இச்சேவை தொடர்ந்தும் பெரும் நட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக ரயில் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இக்கட்டண உயர்வு பஸ்கட்டண உயர்வை விடக் குறைவாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-3)

## 'வற்'வரி குறைக்கப்பட்ட போதும் அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலை குறைவதற்குப் பதிலாகக் கூடுகிறது

அத்தியாவசியப் பொருள்கள் மீதான பெறுமதிசேர் (வற்) வரி பத்து வீதம் குறைக்கப்பட்டிருப்பதாக வரவு - செலவுத் திட்டத்தில் அரசு அறிவித்திருந்தது. ஆனால், வரவு - செலவுத்திட்ட அறிவிப்பு நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட பின்னரும் அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகளின் வீழ்ச்சிக்குப் பதிலாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கிலோ அடிப்படையில் தற்போது சம்பா அரிசி - 50 ரூபா, சிவப்பு அரிசி - 46 ரூபா, பாஸ்மதி அரிசி - 85 ரூபா, மைசூர் பருப்பு - 78 ரூபா, சீனி ஒரு கீலோ - 40 ரூபா, சிறிய வெங்காயம் ஒரு கிலோ - 88 ரூபா, பெரிய வெங்காயம் ஒரு கீலோ - 80 ரூபா, கிழங்கு ஒரு கிலோ - 88 ரூபா, செத்தல் மிளகாய் ஒரு கிலோ - 125 ரூபா, முட்டை - 7 ரூபாவெனச் சந்தையில் விற்கப்படுகிறது.

இதன்படி - சம்பா அரிசி நான்கு ரூபாவாலும், சிவப்பு அரிசி ஒன்பது ரூபாவாலும், பாஸ்மதி அரிசி ஒன்பது ரூபாவாலும், மைசூர் பருப்பு 13 ரூபாவாலும் சனி 4 ரூபாவாலும், சிறிய வெங்காயம் 13 ரூபாவாலும் பெரிய வெங்காயம் 16 ரூபாவாலும், கிழங்கு 22 ரூபாவாலும், முட்டை 3 ரூபாவாலும் அதிகரித்துள்ளது. வற்வரி குறைந்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடையாமல் போனதற்கு எரிபொருள் விலையேற்றம் காரணமாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

## மாடுகளைக் கடத்த முற்பட்டவர் சிக்கினார்

இறைச்சிக்காக மாடுகளை வெட்டி விற்க முற்பட்டவர் எனக் கூறப்படும் ஒருவர் கோபபாய்ப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய்ப் பகுதியில் மாடு ஒன்றைத் திருடி இறைச்சிக்காக மாட்டினை சாவகச்சேரிக்குக் கொண்டு சென்றபோதே இவர் கைதுசெய்யப்பட்டார் எனக் கோப்பாய்ப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(எ-180)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் இளையதம்பி கர்ணா

(இந்து மெய்யியல் சிறப்புக்கலை 2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)



கரணவாய் வடக்கு, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இளையதம்பி கர்ணா (யாழ். பல்கலைக்கழக இந்து மெய்யியல் சிறப்புக்கலை 2ஆம் வருட மாணவன்) நேற்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மரணமானார்.

அன்னார் இளையதம்பி - புஸ்பவதி தம்பதிகளின் பாசமிகு மகனும் புஸ்பராணி, வாசுகி, குகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீதரனின் (அப்பன்) மைத்துனரும் சிவலிங்கம், கோபால் ஆகியோரின் அன்பு மருமகனும் சிவஞானம், இரத்தினவடிவேல், ஈஸ்வரி, தங்கவேல், தர்மரத்தினம் (ஜேர்மனி), தவராசா, தெய்வேந்திரம் (இத்தாலி), கணேசலிங்கம், நிர்மலா, நிசாந்தன், நிசாந்தினி, நாகராசா, நாகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாச்சிமார்கோயிலடி,*
*கரணவாய் வடக்கு,*
*வல்வெட்டித்துறை.* (39332)(30-13-16)

தகவல்:
கு.கணேசலிங்கம்
(சகோதரர்).

### வைரமுத்து றொபின்சன்

(உரிமையாளர், சன் தையலகம், சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு, சிவன்கோயிலடியைச் சேர்ந்த வைரமுத்து றொபின்சன் நேற்றுமுன்தினம் (04.12.2004) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கொட்டையடிதூவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூதன் வைரமுத்து (தந்தை).
(சி-39713)(30-13-16)


லக்ஷ்மி சினிமா இணுவில்



4 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சிம்பு (இருவேடம்),
ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
தினசரி: 4 காட்சிகள்
11.00,3.00,
7.00, 10.00
புதிய நேரம்
மன்மதன்
(39283)

ராஜா யாழ்ப்பாணம்
5 முதல் 9 வரை சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம் பு.நே. 10.30, இரவு 9.30 மட்டும்.
SPIDERMAN 2
ஸ்ரீகாந்,
சிநேகா
போஸ்
பு.நே. 2.30,6.30 மட்டும்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது. (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
இலங்கையில் முதன்முறையாக
வெளியிடப்படும் திரைப்படம்
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்,
ரமிதாரெட்டி நடித்த
ராஜ்ஜியம்
(றீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே) VAN HELSING

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்
தினசரி 11.00, 3.00, 7.00, (பு.நே)



அனேகரின் வேண்டு கோளுக்கு இணங்க 07 ஆம் திகதி முதல்
அட்டகாசம்
(C-37740)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வசந்தகுமாரி செல்வராஜா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தகுமாரி செல்வராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (04.12.2004) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - லீலாவதி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணம் தம்பதிகளின் மருமகளும் செல்வராஜாவின் (காசாளர்- மக்கள் வங்கி பிரதான வீதி கிளை, தலைவர்- அரியாலை ஐக்கிய கழகம்) அன்பு மனைவியும் பாதுஷா (A.T.I.N.D.B.S.II), சண்ஜீவன் (AAT யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி), சங்கீரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், பிரணவநாதன், இலங்கேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, செல்வராஜா (லண்டன்), தேம்பாமலர், வனஜா, உருத்திரேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி, S.S.சண்முகநாதன், தியாகராஜா, சோதிராசா, சத்தியசீலன், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் கிருபைராஜா, பாசுபதன், கணேசலிங்கம், புஸ்பமலர், ஜனனி, ரேணுகா ஆகியோரின் மைத்துனியும் தியாகராஜா, தவயோகேஸ்வரி, சந்திரபவானி, இந்திராணி, சுகுணவதி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2004) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு (பு.நே.) 847, நாவலர் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*847, நாவலர் வீதி,*
*அரியாலை.*
T.P.No:- 0777110348 (39327)(30-13-16)

தகவல்:
S.C.செல்வராஜா
(கணவர்).

### வேலுப்பிள்ளை நடராஜா (கே.வி.நடராஜன்)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கணேஸ்வரம், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் 'கற்பகம்' பத்திரிகை ஆசிரியருமான வேலுப்பிள்ளை நடராஜா (கே.வி.நடராஜன்) அவர்கள் நேற்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி நாகம்மா (ஓய்வுபெற்ற மருத்துவமாது) அவர்களின் அன்புக் கணவரும் தயாபரி, அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் மாமனாரும் பிரகலாதன், பிரநீபனா, பிரகாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஐயாத்துரை, நாகமுத்து, சிவகுரு, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2004) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மணற்புலம், கணேஸ்வரம் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணற்புலம், கணேஸ்வரம்,*
*அளவெட்டி.* (39328)(30-13-16)

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பு சின்னத்துரை



மானிப்பாய் வடக்கு, இராசகாரியார் லேனைச் சேர்ந்த தம்பு சின்னத்துரை அவர்கள் நேற்று (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி (சிங்கப்பூர்), அருமைத்துரை, விக்னேஸ்வரன், இந்திரன், யோகேந்திரன், ரகுநாதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2004) செவ்வாய்க்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராசகாரியார் லேன்,*
*மானிப்பாய்.* (39330)(30-13-16)

தகவல்:
சி.அருமைத்துரை.

# 2005 ஆம் ஆண்டின் இறுதியில் ரணில்தான் நாட்டின் ஜனாதிபதி

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு,டிசெ.6

''2005ஆம் ஆண்டின் இறுதியில் ரணில்தான் நாட்டின் ஜனாதிபதி. சந்திரிகா என்னதான் கூறினாலும் மக்களின் தீர்ப்பிற்கு அவர் தலை வணங்கியாக வேண்டும். எமது நாட்டில் கல்வி பயின்று, எமது மக்களின் தேவைகளை அறிந்தவர் ரணிலை விட யார் இருக்கமுடியும்?

சந்திரிகா தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதற்காகப் பல விழாக்களை ஏற்பாடு செய்திருந்தார். இதன் முதலாவது விழா அத்தனகலையில் நடைபெற்றபோது மழை கொட்டியது. இடிமின்னல் தாக்கியது. இயற்கையின் தீர்ப்பு இதுதான். அந்தக் கூட்டத்தை நடத்த முடியாமல் அங்கு நிலைமை மோசமானது. மக்களின் தீர்ப்பும் அப்படியே அமைந்துவிடும்.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க.

கொழும்பு நகரசபை மண்டபத்தில் கட்சியின் 50ஆவது வருட சம்மேளனத்தில் நேற்று உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை அடுத்த ஜனாதிபதியாக்க வேண்டுமென மக்கள் ஏலவே தீர்மானித்துவிட்டனர். தேர்தல் அடுத்த வருடம் நடந்தபின் ரணில் நிச்சயமாக ஜனாதிபதியாவார். ரணில் விக்கிரமசிங்க எமது நாட்டில் கல்வி பயின்று எமது அரசியல் கலாசாரத்தை நன்கு அறிந்துவைத்துள்ள ஒருவர், அவர் எமது பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற தகுதியான ஒருவர். ஆனால், தகுதியில்லாத பலர் இன்று அரசியல் தலைமைகளுக்காகப் போட்டியிடுவதைக் காணமுடிகின்றது.

எமது கட்சி கூடுதலான அளவு நேர்மையைக் கண்டுள்ளதால்தான் இன்றும் நாம் எதிர்க்கட்சியில் இருக்கிறோம். சந்திரிகா கூறும் பொய்யில் ஒருவீதத்தை ரணில் கூறினால் நாம் இன்று ஆட்சியிலிருப்போம். ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க எவரையும் ஏமாற்றியவரல்லர். அவரை சர்வதேசத்துக்குமே தெரியும். சந்திரிகா அரசாங்கத்தில் நாம் இருந்தபோது வெளிநாட்டு உதவிகள் கேள்விக்குறியாகியிருந்தன. ஆனால், ரணில் பிரதமராக இருந்தபோது, டோக்கியோவில் உலகமே ஒன்றுகூடியது. அவ்வாறான ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யவேண்டியது எமது அனைவரினதும் கடமையாகும். - என்றார் அவர். (க-3)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொரு முயற்சிக்கும் பலமான எதிர்ப்பைத் தெரிவித்த நேற்றைய ஐ.தே.க. சம்மேளனம், இதுவிடயத்தில் உரிய அனைத்துக் கட்சிகள், சிவில், சமய மற்றும் வேறு அமைப்புக்களினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து அரசமைப்பைச் செயற்படுத்துவது மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரங்கள் அனைத்தையும் கட்சியின் செயற்குழுவிற்கு வழங்குவதென்றும் தீர்மானித்தது.

2005ஆம் ஆண்டு முடிவுக்கு வரும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை அதற்கு அப்பாலும் எந்தவொரு வழியிலாவது நீடிப்பது ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் மக்களுக்குள்ள உரிமையும் மக்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தும் உரிமையும் இல்லாதொழிப்பதோடு இந்த ஏற்பாடு மக்களின் சுயாதிபத்தியத்தை மீறுகின்றது என ஐ.தே.க. சம்மேளனம் தீர்மானித்தது.

இத்தகைய நடவடிக்கையை எதிர்ப்பதோடு இது விடயத்தில் மக்களது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான சகல அதிகாரங்களையும் கட்சியின் செயற்குழுவிற்கு வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து மக்களது உரிமைகள் பேணல், அனைத்து மக்கள் பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு, ஜனநாயக உரிமைகளைப் பேணல் அனைவருக்கும் சமவுரிமை, சம சந்தர்ப்பம், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வு, நகர மற்றும் கிராம அபிவிருத்தி ,சகலருக்கும் தொழில்வாய்ப்புப் போன்ற விடயங்களடங்கிய 15 வருடத்திட்டம். இவை அனைத்தையும் உள்ளடக்கிய ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் ஆகியவற்றைத் தயார் செய்வதற்கான அதிகாரம் கட்சியின் செயற்குழுவிற்கு வழங்கப்பட வேண்டுமென்றும் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக கட்சித் தலைவரின் பெயரை சம்மேளனத்தின் அங்கீகாரத்திற்காக பிரதித் தலைவர் கரு ஜயசூரிய முன்மொழிந்தபோது ஐ.தே.உறுப்பினர் பி.தயாரத்ன இதனை வழிமொழிந்தார்.

இந்தப் பிரேரணையையும் சம்மேளனம் ஏகமனதாக அங்கீகரித்தது. (க-3)

## நிதி மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணையை மேற்கொள்ள இராணுவ விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகிறது.

குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக வேறு பல குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## எம்.பிக்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னங்களையே பயன்படுத்தி வருகின்றார்கள். இதற்கான தீர்வையற்ற வாகனம் வழங்கப்பட்டுள்ளதோடு, மாதாந்தம் ரூபா 12 ஆயிரம் முதல் 22 ஆயிரம் வரை எரிபொருள் செலவும் வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்ட போதிலும் ஜே.வி.பி. காட்டிய எதிர்ப்பு காரணமாக இது கைவிடப்பட்டது. (க-3)

# அரசுக்கு ஐ.தே.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்துவிட்டது. பொறுத்தது போதும் என்றாகிவிட்டதால் அரசை வீட்டுக்கு அனுப்பும் செயற்றிட்டத்தை உடனடியாக ஜனவரி முதல் ஆரம்பிக்கவேண்டியுள்ளது.

20 வருட கால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து தனிநாடு கோரியவர்களை குறைந்தபட்ச சமஷ்டி முறைமைக்கு இணங்கச் செய்தது ஐ.தே.க. அரசு.

### மௌனத்தைக் கலைக்கும் நிலைமையில் நான்

ஆனால், இன்று நிலைமை என்ன? கிழக்கில் யுத்த சூழ்நிலை. என்று யுத்தம் வருமோ தெரியாது என்ற மோசமான நிலைமை. மறுபுறம் சந்திரிகா - ஜே.வி.பியின் அராஜக ஆட்சி. கடந்த ஆறுமாத காலம் நான் மௌனமாக இருந்து அரசின் நடவடிக்கைகளை அவதானித்தேன். ஆனால், அந்த மௌனத்தைக் கலைக்கவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

2005 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக என்னை நியமிக்க நடவடிக்கை எடுத்தமைக்காக கட்சியின் அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதன் மூலம் கட்சியை மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்தையும் பாதுகாக்க நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு பெருமைக்குரிய விடயம் ஒன்றுள்ளது. நாட்டைத் தனது ஆட்சிக்காலத்தின் போது கட்டி எழுப்பி வீழ்ச்சியான நிலையிலிருந்து துறைகளை மேம்படுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளது.

1977ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக 17 வருடம் ஆட்சி செய்திருந்த நாம் இன்னும் சில காலம் ஆட்சிசெய்திருப்போமேயானால் எமது நாடு ஜப்பானைப் போன்று முன்னேற்றம் அடைந்திருக்கும். நான் கடந்த முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது முதலிரண்டு வருடத்தை நாட்டை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கு மாறு கேட்டேன். அந்த இரு வருட காலத்தில் நாட்டு அபிவிருத்தியையும் நாட்டின் தேசிய பிரச்சினையையும் கையாளவேண்டி இருந்தது. அந்தக் காலப்பகுதியில் நாம் விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தோம். தனிநாடு கோரிய விடுதலைப் புலிகள் குறைந்தபட்சம் சமஷ்டிமுறைக்கு இணங்கினர். முஸ்லிம் தரப்பை இணைத்துப் பேசினோம்; மனித உரிமைகள் பற்றிப் பேசினோம். அப்போதுதான் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான யோசனைகளை புலிகள் முன்வைத்தனர். அதுவும் நாம் முன்வைத்த யோசனைகளுக்கு மாற்று யோசனைகள் போலவே இருந்தன. புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேசத் தயாரானபோது பல சர்ச்சைகள் உருவாக்கப்பட்டன.

ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியைக் குறைத்து வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் தயாரானபோது சந்திரிகா - ஜே.வி.பி. - கூட்டணி எம்மைச் சீர்குலைத்தது.

இந்த அரசு இதுவரையான தனது பதவிக்காலத்தில் எதைச் சாதித்திருக்கிறது? சம்பள அதிகரிப்பு எங்கே? மணிராசன் குளம் முகாம் அகற்றப்பட்டதா? புலிகள் மாவீரர் தினக் கொடிகளை ஏற்றவில்லையா?

எவ்வாறாயினும் இன்று இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கான பேச்சு மேசையில் உட்கார முடியவில்லை. சர்வதேச சமூகம் இலங்கை குறித்து கவனம் செலுத்த மறுக்கிறது.

இப்போது கிழக்கில் யுத்த சூழ்நிலை. மறுபுறம் எப்போது யுத்தமோ தெரியாது. ஆனால், சமாதானத்தில் ஜே.வி.பியினருக்கு அக்கறை இல்லை.

வரவு - செலவுத் திட்டத்தில் அரசு மக்களுக்கு எதைத் தந்தது? இந்தப் பட்ஜெட் ரூபாவின் பெறுமதியை மேலும் குறைக்கவே போகிறது. 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பியினர் வீடுகளில் கொள்ளை அடித்தனர். அன்று கள்ளத்தனமாக செய்தவர்கள் இன்று சட்டம் போட்டு மக்களிடம் இருந்து 5ஆயிரத்து 600 கோடி ரூபாவைக் கொள்ளையிட முயல்கின்றனர். ஜே.வி.பியினர் இன்று மத்திய வகுப்பு மக்களை இல்லாமல் செய்வதற்கு தீர்மானித்திருக்கின்றனர் .

மூன்றுவேளை சாப்பிடுவதற்கு மக்கள் இன்று சிரமப்படுகின்றனர். ஆனால், தமக்கு மூன்றாவது பதவிக்காலத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி பாடுபடுகின்றார். இதில் மூன்று வேளைக்காக போராடும் மக்களின் சார்பில் களமிறங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

ஜனவரி தொடக்கம் கிராமத்தில் இருந்து தேசிய ரீதியாக நாம் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளோம். அரசமைப்பைத் தவறான முறையில் மாற்றம் செய்ய முயற்சித்தால் அதனை மக்களைக் கொண்டு எதிர்க்கவும் நாம் தயார். ஐக்கிய தேசியக் கட்சி தனது கடந்த கால வரலாற்றை மீட்டுப் பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளது.

நாட்டின் வாழ்க்கைச் செலவு வீதம் அதிகரித்துள்ள சூழ்நிலையில் ஒரு விடயத்தை மட்டும் நான் கூறவிரும்புகின்றேன். 2001 இல் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது சர்வதேச சந்தையில் 'மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் 18.60 டொலர்கள். 2004 இல் அது 33.80 டொலராக அதிகரித்திருக்கின்றது. எமது ஆட்சிக்காலத்தில் எரிபொருள்களின் விலை 2 ரூபாவால் மட்டுமே அதிகரித்தது. இத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கே அரசு இருக்கிறது. பிரச்சினையைத் தீர்க்கமுடியாவிட்டால் அரசு பதவி விலகவேண்டும்.

நாம் பொறுத்த காலம் போதும் இனி எமது வேளை வந்து விட்டது. 2005ஆம் ஆண்டில் நாம் பல சாதனைகளை செய்ய வேண்யுள்ளது - என்றார் ரணில் . (க-3)

மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு

விலை 14,000/= மட்டும்

IDD ரூபா 25/=மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம்.

கையிருப்பு முடியும்வரை மட்டும் உடனே விரையுங்கள்!

மேலதிக விவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

OFFICE:- இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7070, 0712 399 220, 0777 281 521.

SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-39376)(30-14-17)

COLLEGE OF COMPUTER STUDIES

மாபெரும் கணனிப் புலமைப் பரிசில் பரீட்சை - 2005 நடைபெறவுள்ளது. இதன் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்.

CCS

No:119, Pointpedro Road, Nallur, Jaffna.

CHEMISTRY நாவலர் ஆனைப்பந்தி யாழ்.நகர்

DIAS B.Sc. (Hons)(Spl. Che.)

இரசாயன இயக்கவியல் (Theory+Paper)

Tu.W.Th 6.30 (39202) ஆரம்பம் 7.12.04

BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய்

(அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

கல்வியாண்டு 2005

தரம் 1 முதல் O/L வரை

SUPER GRADE

ஆசிரியர் குழுவினால்

புதிய வகுப்புகள்

ஆரம்பம்: இன்று 06.12.2004

திங்கள் 4.00 p.m. (39304)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Dip. in Hardware Technology

START: 10-12-04

TIME: 06.00-07.00 EVENING

மாலைநேர வகுப்புக்களாக நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிநெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து 09-12-04ற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறைந்தது ஒருவருடம் பிரயோக மென்பொருளில் பரிச்சயம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளிற்கு

Director

STP Your Partner in IT Solution

73, Palaly Road, Jaffna. T.P: 2222674

வணிகக் கல்வி

G.C.E. O/L

கருத்தரங்கு

07.12.2004

செவ்வாய்: 10.a.m

பிறைற்றின்

சாவகச்சேரி

By.பிரபல ஆசிரியர்கள் (39326)

பிரத்தியேக வகுப்பு

O/L 2005, தரம் 10,9 மாணவர்களுக்குரிய புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

கணிதம் சங்கர்

உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் முழுப் பாடத்திட்டமும் கற்பிக்கப்படும். 1½ மணித்தியால ஒரு வகுப்புக்குரிய கட்டணம் 150 ரூபா மட்டுமே.

தொடர்பு:

Director,

NEW SCIENCE HALL,

Kannathidy Road.

Jaffna.

T.P 0777 917611 (39324)

வெளிவந்துவிட்டது

A/L 2005 மாணவர்களுக்காக

பொதுச்சாதாரண பரீட்சை வழிகாட்டி நூல்

P.கமல்தாசன் & உமாசங்கர்

சொற்ப பிரதிகளே! கிடைக்குமிடங்கள்:

பூபாலசிங்கம், சிதம்பரப்பிள்ளை, தர்க்கா, அறிவமுது (வன்னி), ஸ்ரீலங்கா, கவிதா (வவுனியா) (39329)

விசிற்றோக் நெற்

315A, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி திருநெல்வேலி, யாழ்.

T.P 2226637, 4591298

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

அதிரடி விலைக்குறைப்பு

G S M Land Phone,

Mobitel Land Phone

~~10600/=~~ ⇨ 9800/=

★எந்த இடத்திலும் பொருத்தக்கூடியது

★தெளிவான அழைப்பு

★உத்தரவாதம் உண்டு

★எம்மிடம் பெறும் தொலைபேசி இணைப்பிற்கு மட்டும்.

வெளிநாட்டு அழைப்பு - 8/=

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (39314)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.